Registered as Newspaper

உதயன்

சுடர் : 36
கதிர் : 027

புதன்கிழமை

மார்கழி 08 ஆம் நாள்
23 டிசெம்பர் 2020

வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20
விலை : ரூ.30

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

கொரோனாவுக்கும் ஜெனீவாவுக்கும் 2021இல் அரசால் முடிவுகட்டப்படும்

ஜனாதிபதி அதீத நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 23

2020ஆம் ஆண்டில் கொரோனா என்ற ஒரேயொரு எதிரியை எதிர் கொண்டோம். 2021இன் ஆரம்பத்தில் கொரோனா

20

இரணைமடுக்குள வான்கதவுகள் திறப்பு!

கிளிநொச்சி, டிசெ. 23

வடக்கு மகாணத்தில் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி அதிகரித்து வருவதையடுத்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கையாக கிளிநொச்சி இரணைமடுக்கு ளத்தின் இரண்டு

20

50க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளுக்கு கொரோனா

குடும்பத்தினர் அந்தரிப்பு: ஐ.நாவிடம் முறையீடு

கொழும்பு, டிசெம்பர் 23

உறவுகளைப் பிரிந்து சிறைக் கூண்டுக்குள் பல வருடங்களாக அடைபட்டுக் கொண்டு விடுதலைக்காக ஏங்கித் தவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தற்போது 'கொரோனா' என்ற கொடிய வைரஸ் பிடிக்குள் அகப்பட்டுள்ளனர்.

19

சிறையிலிருந்து திரும்பத் தயாரான

கண்ணதாசனுக்கும் கொரோனா வைரஸ்

கொழும்பு, டிசெ. 23

கொழும்பு மகசின் சிறைச்சாலையிலிருந்து வீடு திரும்பத் தயாராகியிருந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தமிழ் அரசியல் கைதியான யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்

19

கிளிநொச்சியில்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உறுதி

கிளிநொச்சி, டிசெ. 23

கிளிநொச்சியில் மேலும் இருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை இன்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் ஒரே குடும்

19

கொரோனா பெருந்தொற்றால் சுனாமி நினைவேந்தல் தடை

இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

எதிர்வரும் 26ஆம் திகதி சுனாமி நினைவேந்தலை நினைவாலயங்களில் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான

19

கண்ணிவெடி அகற்ற இரண்டு ஆண்டுகள்

முகமாலையில் நிலைமைகளை ஆராய்ந்தபின் அமைச்சர் இந்திக்க

கிளிநொச்சி, டிசெ. 23

போர் முடிந்ததும் ஆரம்பிக்கப்பட்ட கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் இன்னமும் நிறைவடையவில்லை.

19

மருதனார்மடம் கொத்தணி **94**

யாழ்ப்பாணம், டிசெ. 23

மருதனார்மடம் கொத்தணியு

20

சுமந்திரனின் ஜெனீவாக் கடிதம் கூட்டமைப்பின் நிலைப்பாடல்ல!

சர்வதேச விசாரணையே தேவை என்கின்றார் ரெலோவின் தலைவர் செல்வம்

19

பிரிட்டனைத் தாக்கும்

உருமாற்றமடைந்த கொரோனா இலங்கையிலும் பரவ வாய்ப்பு

மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 23

பிரிட்டனில் அடையாளம் காணப்பட்டுள்ள உருமாற்றமடைந்த கொடூர கொரோனா வைரஸ்

19

பொலிஸாருக்கு பயந்து 'மாஸ்க்' அணிந்தவருக்கு கொரோனா!

வடக்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

பொலிஸாருக்கு பயந்து வேறொருவரின் மாஸ்கை அணிந்த ஒருவருக்கு கொரோனாத்

19

தமிழீழக் காப்பு தீர்மானத்தை தாயகத்தில் நிறைவேற்றுங்கள்

காசி ஆனந்தன் வலியுறுத்துகின்றார்

கொழும்பு, டிசெ. 23

இரு தேசக் கொள்கையை வலியுறுத்தும் தலைவர் கஜேந்திரகுமார் இருக்கிறார்.

20

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சினேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி

Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)" கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

Mobitel Master unlimited

உங்களுக்கு விருப்பமான
UNLIMITED
பக்கேஜைத்
தெரிவு செய்யுங்கள்

தயவுசெய்து 1717
வரையறுக்கப்பட்ட சலுகை Mobitel.lk/master

UNLIMITED CALLS
மாதாந்தம்
ரூபா. 1500/- மட்டுமே

UNLIMITED CALLS & DATA

Sri Lanka Telecom Mobitel

இறுக்கமான நடைமுறைகளின் கீழ் கிளி. பொதுச்சந்தை இன்று திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 23

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தைகளை இறுக்கமான சுகாதாரப் பொறிமுறைகள் மற்றும் நடைமுறைகளின் கீழ் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று முதல் இந்தச் சந்தைகள் திறக்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொதுச்சந்தைகளை சுகாதார நடைமுறைகளுடன் திறப்பது தொடர்பான விசேட கூட்டம் மேலதிக மாவட்டச் செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமான குறித்த கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவையினர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலர்கள், பொலிசார், இராணுவத்தினர், சந்தை வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது மொத்த சந்தைத் தொகுதியை தனியாகவும், சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை சந்தை வளாகத்தின் வெளிப்பகுதியிலும் நடத்துவதற்கும் ஆலோசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எந்தவொரு வாகனத்தையும் சந்தையின் உட்பகுதிக்குள் அனுமதிப்பதில்லை எனவும், சந்தைத் தொகுதியின் இரு பிரதான வாயில்களை மாத்திரம் திறக்கவும், ஒருவழிப் பாதையாக பயன்படுத்தவும்இணக்கம் காணப்பட்டுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கவும் சுகாதார தரப்பு அறிவுறுத்தியுள்ளது. இத்தனை நடைமுறைகள் உள்ளடங்கலாக கிளிநொச்சி பொதுச் சந்தையை திறக்க சிபாரிசு செய்வதாக சுகாதார துறையினர் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் கிளிநொச்சி பொதுச்சந்தை இன்று திறக்கப்படுகின்றது. *(முன்னர் வந்த செய்தி 9ஆம் பக்கத்தில்)* (ம-6)

கொரோனா உயிரிழப்பு கிழக்கில் மூன்றாகியது

அம்பாறை, டிசெ. 23

கிழக்கில் கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகிய மூன்றாவது நபரும் உயிரிழந்துள்ளதாக அம்மாகாண சுகாதார சேவைகள் பணிமனை பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 778 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

(ஒ.இ)

வெளிநாட்டில் இருந்துவர முன் அனுமதி கட்டாயம்!!

நடைமுறை நீடிக்கப்படுகின்றது

கொழும்பு, டிசெ. 23

உலகின் சில நாடுகளில் கொரோனாப் பெருந்தொற்று கூடுதல் தகவமைப்புடன் வீரியத்துடன் பரவிவரும் நிலையில், வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருவதற்கு முன் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் வகையில் இந்த முன் அனுமதி நடைமுறை எதிர்வரும் 26ஆம் திகதியுடன் நீக்கப்படும் என்றிருந்தது. இந்த நிலையில் புதிய வைரஸ் தொற்றுக் காரணமாக இந்த முன் அனுமதி நடைமுறை நீடிக்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-இ)

மிருசுவிலில் மாடுகள் திருட்டு

கொடிகாமம், டிசெ.23

மிருசுவிலில் (வாய்க்கால் பகுதி) நாம்பன் மாடு ஒன்றும், இரண்டு பசு மாடுகளும் திருடப்பட்டுள்ளன என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்த மாடுகள் திருடப்பட்டுள்ளன என்று நேற்று உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-159)

ஊரெழு அம்மன் வீதி சீரமைப்பு

பிரதேச சபையிடம் அனுமதி கோரிய வீதி அபிவிருத்தி அதிகார சபை

யாழ்ப்பாணம், டிசெ. 23

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் அச்செழு அம்மன் வீதிக்கான புனரமைப்பு அனுமதியையும் வீதிப் புனரமைப்புப் பதாகை வைப்பதற்கான அனுமதியையும் கோரி வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்றுப் பொறியியலாளரினால் தவிசாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஏற்கனவே பிரதேச சபையின் அனுமதியின்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரின் பிரத்தியேக ஆளணியினரால் வீதிக்கான அடிக்கல் நடப்பட்டது. இந்த நிலையில் சபை அனுமதி பெறப்படவில்லை எனவும் உள்ளூராட்சிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசின் நிறுவனம் ஏற்றுச் செயற்படவில்லை என்ற நிலையில் அந்த வீதி அமைப்பிற்கான பதாகையை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அகற்றியிருந்தார்.

இவ்வாறு அகற்றப்பட்டமையை அடுத்து மத்திய அரசின் உயர்மட்ட அரசியல் நெருக்குவாரங்களால் தவிசாளரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரசியல் பழிவாங்கல்களில் இருந்து தப்பிப்பிப்பதற்காக தவிசாளர் நீதிமன்ற முன்பிக்கு விண்ணப்பித்து முன்பிணை பெற்றிருந்தார்.

இந்த நிலையில் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளரால் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு வீதிக்கான விளம்பரப்பதாகையை போடுவதற்கு அனுமதி தருமாறு கோரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து தவிசாளர் கருத்துரைக்கையில், விளம்பரப்பதாகை அகற்றப்பட்டவுடன் ஊரெழு அம்மன் வீதியை புனரமைப்பதற்கான தெரியப்படுத்தல் கடிதங்கள் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இன்று இடம்பெறும் மாதாந்த அமர்வில் அனுமதி பெற்று வீதி அமைத்தலுக்கான அனுமதி வழங்கப்படும் எனவும் அவ் வீதி அமைவதற்கான சபை அனுமதி பெறப்பட்ட பின் என்னால் விளம்பரப் பலகைக்கான அனுமதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படும் என்றார்.

(ஒ.இ)

சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 13 மாடுகள் சங்குப்பிட்டியில் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

கிளிநொச்சியிலிருந்து எந்தவொரு அனுமதியும் பெறாமல் யாழ்ப்பாணத்திற்கு கடத்திவரப்பட்ட 15 மாடுகள் கேரதீவு சங்குப்பிட்டி பகுதியில் பாதுகாப்பு தரப்பினால் மீட்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள சோதனைச் சாவடியில் பாரவூர்தி ஒன்றை சோதனையிட்டபோதே மாடுகள் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் போது மாடுகளை கடத்தி வந்த குற்றச்சாட்டில் முஸ்லிம் நபர் ஒருவரும், தமிழ் நபர் ஒருவரும் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மாடுகளும், லொறியும் பொலிஸாரிடத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

(ம-20)



மணற்காட்டில்

சவுக்கு வெட்டிய 13 பேர் கைது!

வடமராட்சி, டிசெ. 23

மணற்காட்டுப் பகுதியில் சவுக்குமரம் வெட்டிய 13 பேர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அரச காணிக்குள் அத்துமீறி நுழைந்தமை, சவுக்கு மரத்தை சட்டத்துக்குப் புறம்பாக வெட்டியமை ஆகிய குற்றங்கள் இவர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் பயன்படுத்திய மூன்று பட்டா வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் மானிப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

யாழ். விமான நிலையத்துக்கு தந்தை செல்வாவினது பெயர்!

ஆனந்தசங்கரி பரிந்துரை

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு 'தந்தை செல்வா சர்வதேச விமான நிலையம்' என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'ஈழத்து காந்தி' என அன்புடன் அழைக்கப்பட்டவர் தந்தை செல்வா. 1947ஆம் ஆண்டு இலங்கையின் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். பிரிட்டன் ஆட்சிக் காலத்திலேயே சட்டவல்லுநராகத் திகழ்ந்தவர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான ஒரு தீர்வே சிறந்தது எனக் கூறிவந்தாலும் அதற்கு மாற்றாக இனப்பிரச்சிசனையை சுமூகமாகத் தீர்க்கும் நோக்கத்தோடு 'பண்டா செல்வா' மற்றும் 'டட்லி செல்வா' ஒப்பந்தங்களை செயற்படுத்த அன்றைய அரசுகளுக்கு ஆலோசனைகளை முன்வைத்தார். தன்னலம் கருதாது நாட்டையும், மக்களையும் நேசித்த ஒரு ஒப்பற்ற தலைவர். தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர். இறுதி வரை மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்தார்.

இவ்வாறான தலைவர்களை நாடும் மக்களும் மறந்து விடக்கூடாது. அவரின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்க பலாலி விமான நிலையத்துக்கு 'தந்தை செல்வா சர்வதேச விமான நிலையம்' என பெயர் சூட்ட வேண்டும் என்று ஆனந்த சங்கரி மேலும் தெரிவித்தார்.

(ம-க-இ)

பண்டிகைக்கால முடக்கம் இப்போது கூற முடியாது!!

அமைச்சரவைப் பேச்சாளர் மழுப்பல்

கொழும்பு, டிசெ. 23
கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முழு நாட்டையும் முடக்குவது தொடர்பில் இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று காணொலி மூலம் நடைபெற்றது.
இதன்போது, நாட்டில் பல பகுதிகளிலும் கொரோனா பரவியுள்ளது. நத்தார் பண்டிகை காலமும் வருகின்றது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பயணக் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படுமா அல்லது ஊரடங்கு பிறப்பிக்கும் திட்டம் எதுவும் உள்ளதா என்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா பரவல் குறித்து தினமும் ஆராயப்பட்டு வருகின்றது. பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல இடங்களில் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு அது தொடர்பான ஆவணத்தை வைத்திருப்பவர்களை மாத்திரமே நுவரெலியாவுக்கு சுற்றுலாவுக்கு அனுமதிக்கும் திட்டமும் நடைமுறையில் உள்ளது. இப்படி பல நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.
ஊரடங்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போதே கூறமுடியாது. நிலைமையை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையிலும் அல்லது நிலைமையைக் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் இருந்தும், எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. சூழ்நிலைக்கமையவே அந்த முடிவு எடுக்கப்படும், என்றார். (ஒ,44)

வீட்டில் கஞ்சாச்செடி வளர்த்தவர் கைது

பொலிஸ் தெரிவிப்பு

கொடிகாமம், டிசெ. 23
நாவற்குழி 300 வீட்டுத் திட்ட பகுதியில் வீட்டில் கஞ்சாச்செடி வளர்த்த சந்தேகத்தில் நபர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் காலாவதியான மருந்துகளை வைத்திருந்த சந்தேகத்தில் இன்னும் ஒருவரும் அந்தப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.
நாவற்குழியில் குற்றச் செயல்கள் இடம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்டதிர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
(ஒ,159,25)

நாமல் உயன பளிங்குப் பூங்காவை தேசிய மரபுரிமையாக்க முடிவு

கொழும்பு, டிசெ.23
நாமல் உயன பளிங்குப் பூங்கா 2021 ஆம் ஆண்டில் தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.
இதற்கு தேசிய மரபுரிமைகள் குழுவின் அனுமதியைக் கோரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தேசிய நாமல் பூங்காவின் நிறுவுநர் சங்கைக்குரிய ராஹூல தேரரின் அழைப்பை ஏற்று, இராஜாங்க அமைச்சர் பூங்காவுக்கு விஜயம் செய்தார்.
இந்த விஜயத்தில் பூங்காவை தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்துவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஜ-இ)

யாழ். பல்கலையில் தாமதப்படுத்தப்பட்ட போதனைசார் நியமனங்களுக்கு பேரவை அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 23
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக நீண்ட காலமாக வழங்கப்படாதிருந்த போதனைசார் விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரியர்கள் நியமனங்களை வழங்குவதற்கு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.
கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.
இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் 6 ஆண்டுகளாக நியமிக்கப்படாதிருந்த விரிவுரையாளர் பதவிகள் உள்ளிட்ட பல பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 12 நியமனங்களுக்கான அனுமதியை பேரவை வழங்கியுள்ளது. (ஒ,5)

மாணவர்கள் மதிப்பளிப்பு

மன்னார்,டிசெ.23
மடு கல்வி வலயத்தில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.
மடு வலயக்கல்விப் பணிமனையில், பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.
இதன் போது மடு கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 28 மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் கௌரவிக்கப்பட்டனர். (க-56)

மண்சரிவால் ஒருவர் சாவு

கொழும்பு, டிசெ. 23
மாத்தளை மாவட்டத்தின் கலேவல வஹகோட்டே பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் 74 வயதான ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். (ஒ,இ)

கிளிநொச்சியில்

மாஸ்க் அணியாதோருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

கிளிநொச்சி, டிசெ. 23
கிளிநொச்சி நகரப் பகுதியில் முகக்கவசம் அணியாத 4பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.சரவணபவன் தெரிவித்தார். கிளிநொச்சி நகரப் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இன்றைய தினம் மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே முகக்கவசம் அணியாத 4பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ஒ,316)

பிரிட்டனுக்கான கதவை இலங்கையும் மூடியது!!

கொழும்பு, டிசெ. 23
பிரிட்டனிலிருந்து வரும் விமானங்கள் இன்று அதிகாலை 2 மணிக்குப் பின்னர் இலங்கையில் தரையிறங்குவதற்கு அனுமதிக்கப்படாது என்று சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.
பிரிட்டனில் வீரியம் கூடிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரிட்டனிலிருந்தான விமான சேவைகளை நிறுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் மூக்கை நுழைத்தது மாலைதீவே

எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை என்று இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை மாலைதீவுக்கு அனுப்புவது தொடர்பில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது 'ஜனாஸா' விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்களை மாலைதீவுக்கு அனுப்புவது தொடர்பில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதே வேளை, கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் சடலங்களை பொறுப்பேற்குமாறு மாலைதீவிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. ஜனாஸா விவகாரத்தை கையாள்வதற்காக நிபுணர்குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உலக நிலைவரத்தையும் ஒப்பிட்டு முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு அக்குழுவுக்கு அண்மையில் பிரதமர்கூட ஆலோசனை வழங்கியிருந்தார். மனிதாபிமான அடிப்படையிலும், சாதகமாகவும் பரிசீலிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, என்றார். (ஒ,44)

உள்ளக விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தியது

கோத்தா அரசே

சஜித் அணி சாடல்

கொழும்பு, டிசெ. 23

உள்நாட்டு பிரச்சினையை அரசு சர்வதேச மயப்படுத்தியுள்ளது என்று குற்றஞ் சாட்டும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே எத்ரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாலைதீவுடன் இரகசிய பேச்சுகளை அரசு நடத்தியுள்ளது. தமது நாட்டு பிரஜைகளை அடக்கம் செய்வதற்கு மற்றுமொரு நாட்டிடம் அனுமதி கோருவது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

உள்நாட்டு பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதென்பது இந்த அரசுக்கு கைவந்த கலையாகும். கொரோனாவால் உயிரிழந்தவர்களை உலகில் பல நாடுகள் அடக்கம் செய்கின்றன. அடக்கம் செய்வதன் மூலம் வைரஸ் பரவாது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அப்படி இருந்தும் இங்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

இதனால் உலகம் இன்று சிரிக்கின்றது. எமது நாட்டுக்கும் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. எனவே, இவ்விவகாரத்தை மனிதாபிமான ரீதியில் அணுகி உரிய தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும், என்றார். (ஒ,44)

ஜனாஸாக்களை பாதுகாக்க 5 குளிரூட்டிகள் தயாரிக்கப்பட்டன

கொழும்பு, டிசெ. 23

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை (ஜனாஸாக்களை) பாதுகாப்பாக வைப்பதற்காக குளிர்சாதன வசதிகள் அடங்கிய 5 கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் தனிப்பட்ட நன்கொடையாக இந்த கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. (ஒ,இ)

தீ விபத்துக்கான மர்மம் இன்னும் அவிழவில்லை

கொழும்பு, டிசெ. 22

கொழும்பு புதுக்கடை உயர் நீதிமன்ற வளாகத்தில் கடந்த 15ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்துக்கு மின்சார கசிவு காரணம் இல்லை. ஆனாலும் தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

தீ விபத்து தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் மின்சார சபையால் இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்து தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ,இ)

முறைப்பாட்டு விசாரணைக்கு புதிய வேலைத்திட்டம்

கொழும்பு, டிசெ.23

பொலிஸ் நிலையங்களிலுள்ள முறைப்பாட்டுப் பிரிவை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பொது முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை மேலும் செயல்திறனுடன் மேற்கொள்ள முடியும் என ஆணைக்குழுவின் தலைவர் சந்திர பெர்ணான்டோ சுட்டிக்காட்டியுளார்.

அரசமைப்பு திருத்தத்தின்படி, பொலிஸ் ஆணைக்குழுவிடம் இருந்த பொலிஸ் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் பொலிஸ்மா அதிபருக்கும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் முறைப்பாடுகளை முறையாக விசாரணை செய்து உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பணியே தற்போது பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது- என்றார். (வ-இ)

ஆஸ்திரேலிய புலனாய்வுத் துறையால் இலங்கைக்கு மருத்துவப் பொருள்கள்

கொழும்பு, டிசெ. 23

இலங்கையில் கொவிட்19 தொற்று நோய் பரவலை எதிர்த்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக அவசரமாகத் தேவைப்படும் மருத்துவப் பொருள்களை ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸ் துறையின் புலனாய்வுப் பிரிவு கண்காணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொப்வில்சன் வழங்கியுள்ளார்.

இலங்கையின் சிரேஷ்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரான லலித் பத்திநாயக்கவிடம் அந்த மருத்துவப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. பொலிஸ் அதிகாரிகளிடேயே இந்நோய் மேலும் பரவும் ஆபத்தைக் குறைப்பதற்கும் இலங்கை பொலிஸார் தமது கடமைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் உதவும் மருத்துவ உபகரணங்களே வழங்கப்பட்டுள்ளன. (ஐ-இ)

கம்பஹா மருத்துவமனையில்

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க புதிய பிரிவு

கொழும்பு, டிசெ. 23

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க கம்பஹா மாவட்ட பொதுமருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பிரிவு உலக வங்கியின் உதவியுடன் சுமார் 22 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் என மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் 70ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு சமூக சேவையாக இலங்கை விமானப்படையின் 45 உறுப்பினர்களின் உழைப்புடன் இந்த தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-இ)

பண்டிகை காலத்தை மறந்து பணியாற்றுங்கள்

சுகாதார சேவை ஊழியர்களிடம் சுகாதார மேம்பாட்டு பணியகம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

இலங்கையில் உள்ள அனைத்து சுகாதார சேவை ஊழியர்களும் பண்டிகை காலத்தை குறித்து சிந்திக்காமல் தொற்று நோய்க்கு எதிராக கடுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் மருத்துவர் பாலித்த கருனாபேம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 21பேர் தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே நோயைக் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (ஒ,இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வடக்கு மட்டும் விதிவிலக்கா?

உலக ஒழுங்கு விதிகள் எல்லாவற்றையும் கண்ணுக்குத் தெரியாத கொரோனா தலைகீழாகப் புரட்டிப் போட்டபோதும், இலங்கையின் வடக்கு மாகாணத்தை மட்டும் அசைக்க முடியவில்லை. இலங்கையில் கொரோனா அலை மீண்டும் எழுந்த பின்னர் மத்திய, மாகாண நிர்வாகங்களுக்கு உட்பட்ட சகல அரச திணைக்களங்களும், நிலைமைக்கு ஏற்ப , பணித்தொகுதியை சுழற்சி முறையில் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதனை எல்லா மாகாணங்களும் பின்பற்றி , தங்கள் அலுவலக ஆளணியினரை, பணியின் தன்மைக்கேற்ப சுழற்சி முறையிலேயே கடமைக்கு அழைக்கின்றன. இதன் மூலம் தேவையற்ற பணித்தொகுதியின் நெரிசலைக் குறைப்பதோடு, கொரோனா பரவும் வழியையும் ஓரளவு தடுக்க முடிந்துள்ளது.

ஆனால் இலங்கையில் ஏனைய சகல மாகாணங்களிலும் பின்பற்றப்படும் இந்த முறைமைக்கு மாறாக வடக்கு மாகாணம் மட்டும், சகல திணைக்களங்களிலும் சதவீத ஆளணியினரும் பணிக்கு வந்தேயாக வேண்டும் என்று அடம் பிடிக்கின்றது. அடாது கொரோனா வந்தாலும் விடாது பணிக்குப்போயே ஆகவேண்டும். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மட்டும் இதில் விதிவிலக்கு.

வடக்கில், புதிய கொத்தணியாக மருதனார்மடம் உருவெடுத்த பின்னரே அதனைச் சூழவுள்ள பகுதியில் அமைந்திருக்கும் உடுவில் பிரதேச செயலகத்தில் சுழற்சிமுறையிலான பணித்தொகுதி முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டி என்ன பயன்?

வடக்கில், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகம் தவிர்ந்த ஏனைய சகல அரச திணைக்களங்களும் கட்டாயம் சகலரும் பணிக்கு வந்தேயாகவேண்டும் என்று கண்டிப்போடு இயங்குகின்றன. சரி, மக்கள் பணியாற்றுவதில் அந்தத் திணைக்களத் தலைவர்களுக்கு இருக்கும் இந்த உறுதி பாராட்டப்படவேண்டியதுதான். ஆனால் அதேசமயம் பணியாளர்களுக்கும், அங்கு வரும் பொதுமக்களுக்கும் கொரோனா பற்றிய அச்சத்தை இல்லாதாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்றால், பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

பொதுமக்கள் கைகைழுவும் வசதி கூட இன்னமும் பல அரச அலுவலகங்களில் அறவே கிடையாது. அப்படி இருந்தாலும் கூட தொற்று நீக்கும் திரவம் இல்லாதிருக்கும் அல்லது நீர்க்குழாயில் காற்று மட்டுமே வரும். அதைவிட சகல அரச திணைக்களங்களும் தங்கள் பணித்தொகுதியினரை பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தி, அங்கு கொரோனாத் தொற்று இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகத்தை நிவர்த்திக்க முடியும்.

ஆனால் அப்படியான உருப்படியான காரியங்களை விடுத்து, இந்த வருடத்துக்கான சகல எழுத்தாவண வேலைகளையும் பூர்த்தி செய்து, மத்திய, மாகாண நிர்வாகங்களிடம் நல்லபிள்ளை என்ற பெயரெடுக்கவே எல்லாத் திணைக்களத் தலைவர்களும் விரும்புகின்றனர். ஆனால் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போல, அரச திணைக்களங்களில் யாரேனும் ஒருவருக்கு கொரோனா வந்தால் கூட, அந்த அலுவலகம் முழுதுமே உடனடியாக மூடப்படுவதுடன், சகல பணியாளர்களும் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்படுவார்கள். இதனால் அந்த அலுவலகத்தினூடான சகல பணிகளும் ஸ்தம்பிதமடையும்.

நல்ல பெயர் எடுக்க நினைத்து உள்ளதையும் கெடுத்த கதையாகவே இவை முடியும். எனவே யதார்த்தத்தை உணர்ந்து, கொரோனாவின் வீரியத்தை நினைத்தாவது, சரியான முடிவுகளை வடக்கின் திணைக்களத் தலைவர்கள் எடுக்க வேண்டும்.

யாழில். வெள்ளவாய்க்கால் அடாத்தாக ஆக்கிரமிப்பு

வழக்குத் தாக்கல் செய்ய மாநகர சபை முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாண நகரப் பகுதியில் வெள்ளவாய்க்காலை அத்து மீறி தனது காணியுடன் இணைத்து தகரவேலி அடைத்த நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக் குட்பட்ட வெள்ளவாய்க்காலான குறித்த வாய்க்காலை, யாழ்ப்பாணம், ஐந்து சந்திக் கருகிலுள்ள மானிப்பாய் வீதி முதலாம் ஒழுங்கையில் தனது காணியுடன் இணைத்து நபர் ஒருவர் வேலி அடைத்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர ஆணையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் தெரிவித்ததாவது;

குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே எமக்குத் தெரியப்படுத்தப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் சம்மந்தப்பட்ட நபருக்கு பல முறை அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வேலி அகற்றப்படவில்லை. எனவே அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ப)

வெடிக்காத ஷெல் மீட்பு

வவுனியா,டிசெ.23

வவுனியா ஓமந்தை அரசமுறிப்பு, வயல் காணியிலிருந்து மோட்டார் ஷெல் நேற்று மீட்கப்பட்டது.

வயல் காணியில் வெடிபொருள் இருப்பது தொடர்பாக புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த ஓமந்தை பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் மோட்டார் ஷெல்லை மீட்டனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் மோட்டார் ஷெல் செயலிழக்கச் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-110)

ஒவ்வொரு டொலருக்கும் இரண்டு ரூபா ஊக்குவிப்பு

அரசு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

2021வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வாறு வெளிநாட்டில் தொழில் புரிபவர் உழைக்கும் வெளிநாட்டு செலவாணியை அவர் அல்லது அவர்களது பயனாளிகளால் இலங்கை ரூபாவுக்கு மாற்றீடு செய்யப்படும் ஒவ்வொரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கும் இரண்டு ரூபா ஊக்குவிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊக்குவிப்பு திட்டமானது உள்ளூர் வணிக வங்கிகளால் அமுல்படுத்தப்படுவதோடு ஊக்குவிப்புக்கான கிரயமானது அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். இத் திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய வழிகாட்டல்கள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படும். தம்மிடமுள்ள அந்நியச் செலாவணியை பாதுகாப்பான மூலங்களினூடாக அனுப்பி (மாற்றல் செய்வதற்கும்) அதனை இலங்கை ரூபாவுக்கு மாற்றீடு செய்து நன்மைகளை பெற்றுக் கொள்ளுமாறு வெளிநாட்டில் தொழில்புரிவோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-இ)

நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் அரசு ஒருபோதுமே கைச்சாத்திடாது

அமைச்சர் பந்துல குணவர்தன உறுதி

கொழும்பு, டிசெ. 23

எம்.சி.சி. ஒப்பந்தத்தில் இருந்து நாட்டை விடுவித்த பெருமை ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தைச் சாரும். நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களை எமது அரசாங்கம் ஒருபோதும் ஏற்காது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமெரிக்கா இலங்கைக்கு வழங்கத் தீர்மானித்திருந்த 480 மில்லியன் டொலர் நிதியுதவியை கண்ணிவெடி என்றே குறிப்பிடவேண்டும். நாட்டின் இறையாண்மைக்கு எம்.சி.சி ஒப்பந்தம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஆட்சிக்கு வர முன்னரே நாம் குறிப்பிட்டோம். நல்லாட்சி அரசாங்கம் எம்.சி.சி ஒப்பந்தத்தை

இரகசியமான முறையில் கைச்சாத்திடத் தீர்மானித்தது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் மறைக்கப்பட்டன. ஆங்கில மொழியில் இருந்த எம்.சி.சி ஒப்பந்தத்தை சிங்கள மொழிக்கு மொழி பெயர்த்து பல விடயங்களைப் பகிரங்கப்படுத்தினோம். நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட மாட்டோம் என நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். அதற்கேற்ப எம்.சி.சி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நாம் இணக்கம் தெரிவிக்கவில்லை - என்றார். (ப)

அதிகரிக்கும் கொரோனா

முதியோர் தொடர்பில் அதிக கவனம் தேவை

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.23

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக முதியோர் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவதுடன், முகத்துவாரம் முதியோர் இல்லத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைப் போன்று ஏனைய பகுதிகளில் இடம்பெறாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்காலத்தில் மிகவும் அபாயமான சூழலை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றோம். முன்னரை விட 70 சதவீதம் வைரஸ் பரவல் உலக நாடுகளில் அதிகரித்துள்ளது. குளிர் காலம், பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் முதலாம் அலையை விட தற்போது பாதிப்புக்கள் அதிகமாகவே காணப்படும்.

முதியோர் இல்லங்கள் தொடர்பிலும் அதிக அவதானம் செலுத்த வேண்டும். அவ்வாறில்லை என்றால் ஏனைய நாடுகளைப் போன்று முதியோர் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும்.- என்றார். (ஜ-இ)

ஹற்றன் நஷனல் வங்கியால் வாடிக்கையாளர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.23

கொரோனா பெருந்தொற்றால் தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் நீண்ட கால வாடிக்கையாளர்களுக்கு நன்கொடை வழங்கப்பட்டது.

தொழில் முயற்சிகளை மீள உருவாக்குவதற்கான நன்கொடை யாழ்ப்பாணத்தில் உள்ள வடபிராந்திய கிளையில் வைத்து வழங்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் 200 பேருக்கு முதற்கட்டமாக வழங்கப்படவுள்ள நிலையில், வடபிராந்தியத்தில் 28 தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நேற்று நான்கு பேருக்கு முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

நிகழ்வில் இணையவழியில் சிறிய நடுத்தரத் தொழில் முயற்சிப் பிரிவின் தலைவர் சிரேஷ்ட முகாமையாளர் கை. இந்திரவாசன், வடபிராந்திய வியாபார நடவடிக்கைக்கான சிரேஷ்ட முகாமையாளர் க.வாதுளன், கடன் வழங்கல் பிரிவின் வடபிராந்திய முகாமையாளர் ம.தயாகரன், வியாபார விருத்திக்கான மனித வளப் பங்காண்மைப் பிரிவின் தலைவர் சிரேஷ்ட முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் மற்றும் தொழில் முயற்சிக் கடன் பிரிவின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (க-111)

அடங்காத வெள்ளத்தால் மறையும் பிரதான வீதிகள்

மட்டக்களப்பு,டிசெ.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால், தாழ் நிலங்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் பிரதான வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் வீதி ஓரத்தில் கம்புகளில் சிவப்பு துணி எச்சரிக்கைக் காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கொழும்பு பிரதானவீதியின் புனானை ஜெயந்தியாய பகுதியில் வெள்ள நீர் ஊடறுத்துப் பாய்வதனால், பிரதான போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இதனால் நெடுந்தூரப் போக்குவரத்துக்கள் தடைப்படுவதுடன், தொழில் நிமிர்த்தம் செல்வோர் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். (க-150)

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை இல்லாதொழிக்க எந்தத்திட்டமுமில்லை

கொழும்பு,டிசெ.23

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவை இல்லாதொழிப் பதற்கு எந்த நடவடிக் கையும் எடுக்கப்பட வில்லை என்று அரச தரப்பால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளதாவது, குறித்த ஆணைக் குழுவைப் போன்ற மாற்று அமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக புதிய உறுப்பினர்களை நியமிக்க அரசு விரும்புகிறது. அதற்கான பெயர்கள் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் அதிகாரங்களில் மாற்றங்கள் இருக்குமா என்பது குறித்து இன்னும் பரிசீலிக்கப்படவில்லை.

இது தொடர்பாக தேவைப்பட்டால் சட்ட மாற்றங்கள் குறித்து அரசு நாடாளுமன்றத்தில் தேவையான திட்டங்களை முன்வைக்கும்.

இலங்கை மின்சார சபை தொடர்பாக கடந்த சில ஆண்டுகளில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் செயற்பாடுகளில் பல சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன-என்றார். (க-இ)

சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பது தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும்

எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, டிசெ.23

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில், சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படும் போது எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படும் என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஜக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது;

அரசாங்கம் நாட்டை மீளத்திறப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என்று நாம் ஏற்கனவே வலியுறுத்தியிருந்தோம். நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் தீர்மானங்களை நாம் எதிர்க்கமாட்டோம். சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படும் போது எவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படும் என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். அவர்கள் உரிய சுகாதார தனிமைப்படுத்தல் நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படுவார்களா? நாட்டின் எந்தெந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்? என்பது போன்ற கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என்றது. (ஜ-இ)

கடையில் திருட்டு

கிளிநொச்சி,டிசெ.23

தருமபுரத்தில் தனியார் கடையொன்றை உடைத்து, அங்கிருந்த பொருள்கள் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளன.

கடையின் கூரை ஓட்டைக் கழற்றி உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த வாசனைப் பொருள்கள், பால்மா வகைகள் என பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். இந்தக் கடையில் 3 தடவைகள் திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-113)

600 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

சாவகச்சேரி,டிசெ.23

தென்மராட்சி பிரதேசத்தில் புயல் மற்றும் பெருமழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இரண்டாவது தொகுதியினருக்கான, உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2 ஆயிரத்து 133 குடும்பங்களில் ஏற்கனவே 615 குடும்பங்களுக்கு உலர் உணவுப். பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது தொகுதியில் 600 குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டச் செயலகத்திலிருந்து நிதி கிடைத்ததும் மூன்றாவது தொகுதியினருக்கான உலர் உணவுப் பொருள்கள். விநியோகிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

பளை,டிசெ.23

பச்சிலைபள்ளி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், தேவையுடைய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பளைக் கோட்டதில் உள்ள அனைத்து பாடசாலைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப் பட்டன. தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அவற்றை வழங்கினார். (க-ரி2)

மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு,டிசெ.23

களுவாஞ்சிகுடி துறைநீலாவணை பகுதியில், மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துறைநீலாவணை 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முருகேசு புலேந்திரன்(வயது61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரும்புக்கத்தியை வீதியால் எடுத்துச் செல்லும் போது, வீதியின் அருகாமையிலுள்ள மின்மாற்றியின் உயரமுத்தமின் சாரக்கம்பியில் கத்தி தவறுதலாகப்பட்டுள்ளது. அதனையடுத்து மின்சாரத்தால் தாக்கப்பட்டு வீதியில இழுத்து வீசப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

இலங்கைக்கு

சுற்றுலாவிகளை அனுப்ப வெளிநாடுகள் தயாராம்

கொழும்பு,டிசெ.23

விமான நிலையம் திறக்கப்பட்டவுடன், ரஷ்யா தவிர இந்தியா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளும் தங்கள் நாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அனுப்ப விருப்பம் தெரிவித்துள்ளன. அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்காக டிசம்பர் 26 ஆம் திகதி விமான நிலையத்தை திறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதற்காக நாள் ஒன்றுக்கு 300 சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க சுகாதார அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று சுற்றுலா அமைச்சகச் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் மட்டுமே முதலில் அழைத்து வரப்படுகிறார்கள் என்ற சமூக ஊடக அறிக்கைகளுக்குப் பதிலளித்த அவர், எந்தவொரு நாட்டிலிருந்தும் மக்களை வரவழைக்க இலங்கை திறந்தே உள்ளது என்றார்.

ரஷ்யா இந்தக் கோரிக்கைக்கு ஆரம்பத்தில் பதிலளித்தது. அத்துடன், இந்தியா மற்றும் ஜேர்மனியிடமிருந்து கோரிக்கைகளையும் நாங்கள் பெற்றுள்ளோம். பிரித்தானியாவைப் பொறுத்தவரை, அந்த நாடு தனது நாட்டினருக்கு வெளியேற எல்லைகளை மூடியுள்ளது எனக் கூறியுள்ளார். (ப)

உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் பகிரும் பொறிமுறையே சிறப்பானது

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 23

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்வது சிறப்பானதாக இருக்கும் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் தற்போதும், மாகாணசபைகள் இயங்குகின்றன. தேசிய வரவு-செலவுத் திட்டத்தில் மாகாணசபைகளுக்கு 60 சதவீதம் நிதி ஒதுக்கப்படுகின்றது. அமைச்சுகள் இருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகளுக்கு பதிலாக ஆளுநரும், அதிகாரிகளும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். எனவே, அச் சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதா, இல்லையா என்பது வேறுகதை. மாகாணசபை முறைமை என்பது அரசமைப்பில் ஓர் அங்கம். அதனை நீக்குவதாக இருந்தால் அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டுதான் அதனைச் செய்யமுடியும். அதிகாரம் என்பது மக்கள் தமது அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடிவெடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கவேண்டும். மாகாணத்துக்கு இருக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுமானால் அது சிறப்பானதாக இருக்கும். நாமும் அதனை விரும்புகின்றோம். மாகாணசபையா, உள்ளூராட்சி சபையா என பெயர் முக்கியமில்லை. மக்களுக்கு தமது அபிலாசைகளை நிறை வேற்றிக்கொள்வதற்கான அதிகாரப்கிர்வு பொறிமுறையே அவசியம்- என்றார். (ப-44)

போதையில் சாரத்தியம் இருவருக்குத் தண்டம்

சாவகச்சேரி,டிசெ.23

மதுபோதையில் வாகனம் செலுத்திய இரண்டு சாரதிகளுக்கு நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுத் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையின்போது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, இருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. இவர்களின் சாரதி அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (க-9)

திட்டமிடப்படாத நடுகையால் வெட்டி வீழ்த்தப்படும் மரங்கள்

வவுனியா,டிசெ.23

வவுனியா ஏ-9 வீதியோரத்தில், விதை உற்பத்தி திணைக்களத்துக்கு முன்பாக முறையற்ற விதத்தில் மரங்கள் நடப்பட்டுள்ளன.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நடப்பட்ட மரங்கள் உயர்வாக வளர்ந்து செல்லும் நிலையில், மின்சார இணைப்புக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் என்பதற்காக, வெட்டப்பட்டுள்ளன.

அதேவேளை கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் அதே பகுதியில் நாட்டப்பட்ட ஏனைய மரங்களும் சிறியளவில் வளர்ந்துள்ளன. அந்த மரங்களும் வளர்ச்சியடைந்தால் மின்சார இணைப்புடன் தொடுகையுறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அதன்போது மரங்கள் வெட்டப்படும்.

எனவே சரியான திட்டமிடப்படாமல் மரங்களை நாட்டி விட்டு அது வளர்ச்சியடைந்த பின்னர், வெட்டுவதால் என்ன பலன் என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-110)

குளிரூட்டப்பட்ட கொள்கலனில் சடலம்;

சுகாதாரப் பணிப்பாளரால் நீதி அமைச்சருக்கு கடிதம்

கொழும்பு, டிசெ.23

கொவிட்- 19 தொற்று ஏற்பட்ட சடலங்கள் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அதில், கொவிட் தொற்று காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வது குறித்து உறுதியான தீர்மானம் ஒன்று பெற்றுக் கொடுக்கும் வரை குறித்த சடலங்களை குளிரூட்டப்பட்ட கொள்கலனில் வைக்க, முன் வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, கண்டி, நீர்கொழும்பு ஆகிய பிரதான சட்ட மருத்துவ அதிகாரி அலுவலகங்களுக்கும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனைக்கும் சடலங்களை வைத்திருக்கக்கூடிய குளிரூட்டப்பட்ட கொள்கலன்களைப் பெற்றுத்தருமாறு குறித்த கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-இ)

காலஅவகாசம்;

கூட்டமைப்பு தொடர்பில் எழுந்த கடும் விமர்சனம்

கிளிநொச்சி, டிசெ.23

அரசின் முகவர்களாகச் செயற்படும் சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச நீதி கோருதல் விடயத்தில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது அமைப்பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலங்களில் கூட்டமைப்பினர் அரசை அனைத்துலக விசாரணையில் இருந்தும் காப்பாற்றி ஐ.நாவில் கொலையாளிகளை நீதிபதிகளாகச் சித்தரித்து உள்ளக

விசாரணைகளுக்கு ஆதரவு வழங்கி அதற்கான கால அவகாசத்தைக் கொடுத்து முற்று முழுதாகச் சிங்கள அரசைப் பாதுகாத்தது யாவரும் அறிந்ததே. தற்போது இதே கூட்டமைப்பு கோத்தாபய அரசைப் பாதுகாக்கும் நோக்குடன் மீண்டும் காலக்கெடு எனும் வாசகத்துடன் உயர் மட்டத் தலைவர்களைச் சந்தித்துள்ளது. வரும் ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் என்பன எந்த ஒரு தீர்மானமும் எடுப்பதற்கு நாம் சம்மதிக்கப் போவதில்லை. கடந்த தேர்தலில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தக் கூடிய இரண்டு பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்துள்ளனர். கூட்டமைப்பு ஜெனிவாவுக்கு முண்டி அடித்துக்கொண்டு செல்வதாக இருந்தால் நாம் கடும் நடவடிக்கையை சர்வதேச அளவில் எடுப்போம் - என்றார்.

(ப-6)

தீவகத்தில் பசுக்கள் திருட்டு; பொலிஸார் அசண்டையீனம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.தீவகத்தில் மக்கள் வாழ்வாதாரத்துக்கு வளர்க்கும் மாடுகளைத் திருடி இறைச்சிக்காக வெட்டும் கும்பல்கள் தொடர்பில் பொலிஸார் அசண்டையீனமாக இருப்பதாக குற்றஞ்சாட்டி மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

தனது பசுக்கன்று ஒன்று வீட்டு முற்றத்திலேயே திருடப்பட்டு. இறைச்சியாக்கப்பட்டது என்று கடந்த 9 ஆம் திகதி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் அதன் உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் இன்றுவரை அது தொடர்பில் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தே உரிமையாளர் நேற்றுமுன்தினம் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார். (ப-20)

நத்தார் தின நள்ளிரவில் திருப்பலிகள் நிறுத்தம்

மன்னார், டிசெ.23

இவ்வருடம் நத்தார் நள்ளிரவுத் திருப்பலிகள் அனைத்தும் கொரோனாத் தொற்று சூழ்நிலையை கருத்தில் கொண்டு இடை நிறுத்தப்பட்டுள்ளன என்று மன்னார் மறைமாவட்ட ஆயரால் அனைத்து ஆலய பங்குச்சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலின்படி,கொவிட் 19 நோய்த் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளிலும்,தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் தங்கியுள்ள மக்களுக்காக பிரார்த்திக்கும் நோக்குடன் நத்தார் களியாட்ட நிகழ்வுகள், கரோல் , ஒளிவிழா மற்றும் கிறிஸ்மஸ் நத்தார் நள்ளிரவுத் திருப்பலிகள் என்பன நிறுத்தப்பட்டுள்ளன.

நத்தார் தினத்தன்று காலை 7.30 மணிக்கு சமூக இடைவெளி மற்றும், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஆலயங்களில் திருப்பலி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-110,60)

புற்றுநோயாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.23

வடக்கு மாகாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவுகள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெ.ரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை காலமும் பாதிக்கப்பட்ட நபரின் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, ஆயிரம் ரூபா தொடக்கம் ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்தது.

இந்தக் கொடுப்பனவை ஜனவரி மாதம் தொடக்கம் 2 ஆயிரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபா வரை அதிகரித்து வழங்க மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில் ஜனவரி மாதம் தொடக்கம் கொடுப்பனவை அதிகரித்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

மிருசுவில் விடத்தற்பளை வயற்கரை முருக மூர்த்தி கோவில் மண்டபத்தில் அருணகிரிநாதர் சுவாமிகளின் உருவச்சிலை நேற்றுமுன்தினம் திரைநீக்கம் செய்யப்பட்டது. (ஜ-9)

எளிமையான முறையில் நத்தாரை கொண்டாடுக

யாழ். மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

இந்த ஆண்டு நத்தார் பண்டிகையை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி எளிமையாகவும், அமைதியாகவும் கொண்டாடுங்கள் என்று யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் பேரருள் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த ஆண்டு நாங்கள் ஒரு போதும் இல்லாத நத்தார் பண்டிகையை கொண்டாடுகின்றோம். கொரோனாவால் உலகம் முடங்கிக் காணப்படுகிறது. நாம் முன்னர் வாழ்ந்த சாதாரண வாழ்க்கை மாறி, புதிய வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

இந்த நத்தார் பிறப்பில் துன்பங்கள் நீக்கி சுக வாழ்வு வாழ இறைவனை வேண்டுவோம். இந்த விசேட நாளில் ஏழைகளை தேடிச் சென்று உணவு, உடை உள்ளிட்ட பொருள்களை வழங்கி அவர்களை மகிழ்விக்க வேண்டும் - என்றார். (ஜ-7)

நத்தார் கொண்டாட்டத்தில் ஆடம்பரங்களைத் தவிருங்கள்

யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.23

ஆடம்பரங்களைத் தவிர்த்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நத்தார் விழாவைக் கொண்டாடுவோம் என யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தக் காலத்தில் பல்வேறு தேவைகளோடு வாழ்கின்ற மக்கள் மற்றும் ஏழை எளியவர்களுக்கு நாங்கள் இரக்கம் காட்டி பல்வேறு வழிகளில் எங்களுடைய பணங்களை விரயம் செய்யாது அவற்றையெல்லாம் தொகுத்து பயனுள்ள விதத்தில் மக்கள் வாழ்வு பெறும் பொருட்டு இல்லாதவர்களோடு பகிர்ந்துகொண்டு வாழ்வதற்கு இந்த வருட கிறிஸ்துமஸ் விழா எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது

குறிப்பாக இந்தக் காலத்தில் எங்களுக்கு கொடுக்கப்படுகின்ற நடைமுறைகள், கட்டுப்பாடுகள்,சுகாதாரத்தைப் பேணுவதற்காக எங்களுக்கு தரப்படுகின்ற வழிமுறைகள் என்பவற்றைப் பின்பற்றி அவற்றுக்கு மதிப்பளித்து தரப்படுகின்ற அறிவுறுத்தல்களை நீங்கள் புறக்கணிக்காது அவற்றை நாங்கள் நன்மனதோடு ஏற்றுக்கொண்டு, அசௌகரியங்கள் இருந்தாலும் அவற்றை நிறை மனதோடு ஏற்றுக் கொண்டு விரும்பிய வகையில் எமது காரியங்களைச் செய்ய முடியாவிட்டாலும் அவற்றை நாங்கள் ஒரு நம்பிக்கையான மனதோடு பெற்றுக்கொண்டு இந்த விழாவைக் கொண்டாடுவோம் - என்றார். (ப)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 341 மி.மீற்றர் மழைவீழ்ச்சி

மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக பல இடங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

நேற்றுக் காலை 8.30 மணிவரையான 48 மணித்தியாலங்களில் 341 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

புதிய காத்தான்குடி, நாவற்குடா, ஆரையம்பதி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, கிரான் உட்பட பல இடங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

எழுமாறான பரிசோதனை

சாவகச்சேரி, டிசெ. 23

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினரால், பிரதேசத்தில் மருதனார்மடம் கொரோனாத் தொற்றாளருடன் தொடர்புடையவர்கள் மற்றும் கொழும்பு சென்று திரும்பியவர்களுக்கு இன்று எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்தந்த இடங்களில் பரிசோதனை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

திருவந்தாதி வெளியீடு

சாவகச்சேரி, டிசெ. 23

கல்வயல் வேதவனப் பிள்ளையார் திருவந்தாதி கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்டது

செல்வராஜா சுதாகரனது 10 ஆவது நூலான வேத வன விநாயகர் திருவந்தாதி, ஆலயத்தில் வெளியிடப்பட்டது. கல்வயலில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வேதவன விநாயகரைப்போற்றி, 100 நேரிசை வெண்பாக்களால் அந்தாதியாகத் தொகுத்து இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. (க-9)

துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு என்பது கட்டுக்கதை

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு

கொழும்பு. டிசெ.23

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை யோசனை முன்வைக்கப்பட்டதே தவிர அதனை இந்தியாவுக்கு வழங்குவதற்கான யோசனையை முன்வைக்கவில்லை என கப்பற் துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்குத் தாரைவார்க்கும் கொள்கை அரசாங்கத்துக்குக் கிடையாது என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பிற நாட்டவர்களுக்கு வழங்க கடந்த அரசாங்கம் முன்னெடுத்த முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டுள்ளன. அதை அபிவிருத்தி செய்ய உள்ளூர் முதலீட்டாளர்கள் எவரும் முன்வரவில்லை. இதன் காரணமாகவே முனைய அபிவிருத்தி தொடர்பில் ஆராய அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டது. கொழும்பு

துறைமுகத்தை இந்தியாவுக்கு தான் வழங்க வேண்டும் என அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கவில்லை. அரசாங்கம் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவுள்ளது என எதிர்க்கட்சியினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் குற்றஞ்சாட்டுகிறார்கள். தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு. விற்கும் கொள்கை அரசாங்கத்துக்கு கிடையாது. தேசியத்துக்கே அரசாங்கம் எந்நிலையிலும் முக்கியத்துவம் வழங்கும் - என்றார். (ப)

கொரோனா அச்சம்; வவுனியாவில் ஆண்கள் ஆடையகமும் மூடப்பட்டது

வவுனியா, டிசெ.23
வவுனியாவில் நாளாந்தாம் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் கொரோனாத் தொற்றாளர் சென்றனர் என்று கருதப்படும் பிரபல ஆண்கள் ஆடையகமும் சுகாதாரப் பிரிவினரால் நேற்று மூடப்பட்டது.

வவுனியா குருமன்காட்டில் தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவன் சென்று வந்த இடங்கள் தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதனடிப்படையில் மாணவன் சென்று வந்தார் எனக் கருதப்படும் வவுனியா பஜார் வீதியில் முதலாம் மாடியில் அமைந்துள்ள பிரபல ஆடை விற்பனையகம் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டது. அங்கு பணியாற்றிய அனைத்து ஊழியர்களும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனினும் அதன் உரிமையாளர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ப-18)

அரசுக்கு எதிராக பிரேரணை வந்தால் ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைக்கு ஆபத்து

ஜே.சி.அலவத்துவல எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

ஜெனீவா கூட்டத்தொடரில் மீண்டும் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டால் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை உள்ளிட்டவை மீண்டும் இல்லாமலாக்கப்படக் கூடும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் நாடு பொருளாதார ரீதியிலும் ஏனைய துறைகளிலும் பாரிய வீழ்ச்சியடையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஆணைக்குழுக்கள் மற்றும் நீதி மன்றம் உள்ளிட்ட அனைத்து நிய மனங்களும் நிறைவேற்றதிகாரத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மறுபுறம் மனித உரிமைகள் மீறல்கள் எல்லை மீறிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அவ்வாறு மீண்டும் இலங்கைக்கு எதிராகபிரேரணைகொண்டுவரப்பட்டால் மீண்டும் ஜீ.எஸ்.பி. வரிச் சலுகை நீக்கப்படக் கூடும். இவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். தற்போதுள்ளதை விடவும் பெரும் வீழ்ச்சியடையும். நாட்டின் ஆட்சியாளர்களாலேயே நாடு நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.
இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்குமுகங்கொடுத்துள்ளார்கள். வரலாற்றில் முதன் முறையாக தேங்காய் விலைக்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. எனினும் இவ்வாறு வெளியிடப்பட்ட எந்தவொரு வர்த்தமானி அறிவித்தலாலும் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சீனிக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டது. இதனால் இலங்கைக்கு பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டது- என்றார். (ப)

பாலியல் குற்றச்சாட்டு; பொறுப்பாளர் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ.23
உரும்பிராய் கருணை இல்லப் பொறுப்பாளர் மீது சுமத்தப்பட்ட பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் கருணை இல்லப் பொறுப்பாளர் அ.ஈஸ்வரநாதன், இல்லத்தில் தங்கியிருந்த சிறுமி ஒருவர் மீது பாலியல் குற்றம் புரிந்தார் என்று 2012ஆம் ஆண்டு சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். அவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சந்தேக நபரான அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தன. வழக்கின் தீர்ப்பு கடந்த 11ஆம் திகதி வழங்கப்பட்டது. அதில் ஈஸ்வரநாதன் குற்றமற்றவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

பொதுச் சந்தைகள் திறப்பு; கிளிநொச்சியில் விசேட கூட்டம்

கிளிநொச்சி, டிசெ.23
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தைகளை சுகாதார நடைமுறைகளுடன் திறப்பது தொடர்பான விசேட கூட்டம் கிளிநொச்சி மேலதிக செயலர் (காணி) ந. திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவையினர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொலிஸார், இராணுவத்தினர், சந்தை வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது மொத்த சந்தைத் தொகுதியைத் தனியாகவும், சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை சந்தை வளாகத்தின் வெளிப்பகுதியிலும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

எந்தவொரு வாகனத்தையும் சந்தை உட்பகுதிக்குள் அனுமதிக்காது, சந்தை வெளிப் பகுதியில் நிறுத்தவும் சுகாதாரத் தரப்பாலும், பிரதேச சபையாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதேவேளை சந்தைத் தொகுதியின் இரு பிரதான வாயில்களை மாத்திரம் திறக்கவும், ஒரு வழிப் பாதையாகப் பயன்படுத்தவும் இரு தரப்பாலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. எடுக்கப்பட்ட தீர்மானங்களை வட மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்று எதிர்வரும் நாள்களில் தீர்மானம் எடுக்கப்படும் என மேலதிக செயலர் ந.திருலிங்க நாதன் தெரிவித்தார். (ப-6,214)

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 26 குடும்பங்களுக்கு உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியுதவியை சங்கத்தானை ரவிகடை உரிமையாளரின் உறவினர் ஒருவர் வழங்கியிருந்தார். (ஐ-9)

வெல்லும் தலைமுறை: மாணவருக்கு உதவிகள்

முல்லைத்தீவு, டிசெ.23
வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து. ரவிகரனால், முன்னெடுக்கப்படும் வெல்லும் தலைமுறை என்னும் செயற்றிட்டத்தின் 33ஆம் கட்டத்தின் பகுதி ஒன்றுக்கான நிகழ்வு நேற்று நடைபெற்றது.

செயற்றிட்டத்தில் 104 மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டு, அவர்களுக்கு குறிப்பேடுகள் வழங்கப்பட்டன.

இவற்றுக்கான நிதியுதவியை புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் செல்வி ஜெயந்தன் சோபியா வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-246)

வீட்டின் பாதையை அகலிக்க சட்டத்தை மீறிய உறுப்பினர்

மக்கள் விசனம்

முல்லைத்தீவு, டிசெ. 23
தனது வீட்டின் பாதையை அகலிப்பதற்காக, எல்லைக் கல்லைப் பிடுங்கி பாதையை அகலித்த பிரதேச சபை ஒன்றின் உறுப்பினர் தொடர்பில் கிராம மக்களால் கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உடையார்கட்டு கிழக்கில் உள்ள உறுப்பினரின் செயற்பாடு தொடர்பிலேயே மக்கள் இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளனர். தனது வீட்டின் ஒழுங்கையை அகலப்படுத்துவதற்காக, வீதியில் இருந்த எல்லைக் கல்லைப் பிடுங்கி அருகில் உள்ள தனியாரின் வீட்டு முற்றத்தில் அவர் நட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. (ப-19)

மேய்ச்சல் தரைவை இல்லாததால் மன்னாரில் கால்நடைகள் பட்டினி

பண்ணையாளர்கள் கவலை

மன்னார், டிசெ. 23
மன்னாரில் ஒழுங்கான மேய்ச்சல் தரைவை இல்லாமல் கால் நடைகள் பாதிக்கப்படுகின்றன என்று பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
புரேவிப் புயல் அச்சுறுத்தல் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் குளங்கள், வயல் வெளிகள், புலவுக் காணிகளில மழை நீர் நிறைந்து இன்னும் வழிந்தோடாமல் புற்கள் நீரில் முழ்கியுள்ளன. இதனால் கால்நடைகள் ஒழுங்கான மேய்ச்சல் தரைவை இல்லாமல் பட்டினியால் அலைகின்றன. தற்போது மன்னாரின் பல பகுதி களிலும் விவ

சாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டடிருப்பதால் கால்நடைகளைக் காடுப்பகுதிகளுக்குள்ளும், புற்கள் இல்லாத வெட்டை வெளிகளிலும் பராமரித்து வருகின்றோம். பெரு மளவான கால்நடைகள் வீதியோரங்களில் நிற்பதற்கும் ஒழுங்கான மேய்ச்சல் தரைவை மன்னாரில் இல்லாமையே காரணம் என்றனர். (ப-213)

மரத்திலிருந்து வீழ்ந்து இளைஞர் காயம்

சாவகச்சேரி,டிசெ.23
பனை மரத்திலிருந்து கீழே வீழ்ந்த இளைஞர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவிலில் இடம்பெற்றது.

காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

வவுனியாவில் தனிமையிலுள்ளோர் பட்டினியை எதிர்கொள்ளும் அவலம்

வவுனியா, டிசெ. 23

வவுனியாவில் கொரோனா அச்சத்தால் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசால் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படாததால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் வவுனியா திருநாவற்குளம் பகுதியில் பலர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு 6 நாள்கள் கடக்கின்ற நிலையிலும் அவர்களுக்கு எந்த விதமான நிவாரண உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. இதேபோல் கற்குழியில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவியுடன் தொடர்புகளைப் பேணினர் என பூந்தோட்டம் ஸ்ரீநகர் கிராமத்திலும் சிலகுடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அவர்களுக்கும் எந்தவித நிவாரணங்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கூலித்தொழிலை நம்பி இருக்கும் குறித்த குடும்பங்கள் தனிமைப்படுத்தல் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான உதவிகளை அதிகாரிகள் வழங்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ப-110)

கொரோனா பரிசோதனை அதிவேக வீதியில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.23

கொரோனா பரிசோதனைகள் அதிவேக வீதியில் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளியேறும் பகுதிகளில் எழுமாற்று பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.· பண்டிகை காலத்தில் பொது மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம்.

குடும்பத்தில் ஒருவர் மாத்திரம் அத்தியாவசிய பொருள்கொள்வனவில் ஈடுபட வேண்டும். சன நெரிசல் மிகுந்த பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கவும். மத வழிபாடுகளின் போது சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்ற வேண்டும்-என்றார். (வ-இ)

தனிமைப்படுத்திய பெண் உயிரிழப்பு!!

அடக்கம் குறித்து விசாரணை ஆரம்பம்

களுத்துறை, டிசெ.23

தனிமைப்படுத்தலில் இருந்த பெண் திடீரென உயிரிழந்ததை அடுத்து அவரது சடலம் இரகசியமாக அடக்கம் செய்யப்பட்டது.

களுத்துறை, பேருவளை சீனக்கோட்டை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்த விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் 78 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார். அந்த வீட்டில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் அந்த வயோதிபப் பெண் உயிரிழந்ததை அடுத்து அவரது உறவினர்கள் சுகாதார அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாது அடக்கம் செய்துள்ளனர் . (ற-இ)

ஜேர்மன் சுர்காட் சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரின் அனுசரணையில், வவுனியா தவசிகுளம் பாலவிநாயகர் வீதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு, தற்காலிக இல்லம் அமைப்பதற்கான அடிக்கல், சமூக செயற்பாட்டாளர் தனுபனால் நடப்பட்டது. (க)

வனஜீவராசிகள் திணைக்கள அமைச்சர் தனிமைப்படுத்தல்

நுவரெலியா, டிசெ. 23

வனஜீவராசிகள் திணைக்களத்தின் அமைச்சர் சி.பி. ரத்னாயக்க சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அக்கரப்பத்தனை பிரதேசசபைத் தலைவருடன் தலவாக்கலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் ரத்னாயக்கா கலந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் அக்கரப்பத்தனை பிரதேசபைத் தலைவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்தே ரத்னாயக்கா சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ரி5-இ)

மஹியங்கனையில் மீன் மழை!

கண்டி, டிசெ. 23

மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 'விரானகம' என்ற கிராமத்தில் மீன் மழை பெய்துள்ளது. நேற்றும், நேற்று முன்தினமும் மீன் மழை பெய்தது என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வீடு மற்றும் வயல் நிலங்களுக்கு முன்னால் இவ்வாறு மீன்கள் விழுந்தன எனவும் ஒரு சிலர் விழுந்த மீன்களை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ரி5-இ)

விதிமுரண் வர்த்தகம்

பருத்தித்துறை வியாபாரிகளை எச்சரித்த சுகாதார துறையினர்

கொடிகாமம் டிச 23

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் கட்டுப்பாடுகளை மீறி மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளை பருத்தித்துறை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்து அனுப்பினர்.

கொரோனா பரவல் சந்தைகளூடாக யாழ்ப்பாணத்தில் ஊடுருவியுள்ள நிலையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய வடமாகாணத்தில் அனைத்து பொது சந்தைகளும் மூடப்பட்டன.

வியாபாரிகளை சமூக இடைவெளியுடன் கொரோனாக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி சந்தை மற்றும் அதன் வீதியோரம் தவிர்ந்த பகுதிகளில் மரக்கறி மற்றும் மீன் வியாபாரம் செய்ய பருத்தித்துறை நகரசபை அறிவுறுத்தியிருந்தது.

இது குறித்து ஒலிபெருக்கியூடாக தொடர்ந்து அறிவுறுத்தியும் அதனைப் புறக்கணித்து சந்தை அருகேயுள்ள சந்தை வீதியில் அதிகளவான மீன் மற்றும் மரக்கறி வியாபாரிகள் நெருக்கமாக ஒன்று கூடியதால் வியாபாரிகளை அங்கிருந்து சுகாதாரத் துறையினர் எச்சரித்து அனுப்பினர். (ம-159)

1000 ரூபா சம்பள உயர்வு: பேச்சுவார்த்தை டிசெம்பரில்

கொழும்பு, டிசெ.23

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொழில் அமைச்சில் நடைபெற்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற் சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது முதலாளிமார் சம்மேளனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில் தொழிலாளர்களுக்கு பாதகமாகவுள்ள விடயங்களை நீக்குவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. ஆனாலும் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

இதனால் பேச்சுவார்த்தை மீண்டும் டிசெம்பர் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ந)

2021இல் உணவுப் பஞ்சம் ஏற்படும்!

உலக உணவு நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 23

இலங்கையில் அடுத்த ஆண்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படுகின்ற அபாய நிலைமை காணப்படும் என உலக உணவு நிறுவனம் இலங்கையின் விநியோக வடிகாலமைப்பு அமைச்சிடம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கமைய இலங்கையிலுள்ள மொத்த சனத்தொகையில் 20 சதவீதத்தினர் இவ்வாறு உணவு தட்டுப்பாட்டுக்கு ஆளாகப் போகின்றனர் என தெரிவிக்கப்பட்டது.

கொரோனா நெருக்கடியால் உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதிகளில் ஏற்படுகின்ற தாக்கங்களை அடிப்படையாக வைத்தே இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ரி5)

கொரோனாவை ஜனவரிக்குள் மேல் மாகாணத்தில் ஒழிப்போம்!

பசில் ராஜபக்ச தெரிவிப்பு!

கொழும்பு, டிசெ.23

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஒரு கொவிட் தொற்றாளரேனும் இனங்காணப்படாத மாகாணமாக மேல் மாகாணத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் கிராமத்துக்கான தேசிய வேலைத்திட்டத்தின் மேல் மாகாணத்துக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சிக்கான பயணமும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவது மேல் மாகாணத்தில் தான். எனவே ஜனவரி மாதம் தொடக்கம் ஒரு கொவிட் தொற்றாளரேனும் இனங்காணப்படாத மாகாணமாக மேல் மாகாணத்தை மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு மாற்றியமைக்காது மேல் மாகாணம் தொடர்ந்து கொரோனாவால் முடக்கப் படுமாயின் முழு நாட்டுக்கும் இது மிகப் பெரியதொரு பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார். (ற-இ)

திருவெண்பா ஓதுதல் பல்கலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்.பல்கலைக்கழகத்தில் திருவெண்பா ஓதுதல் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப் பட்டது.

இந்நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் அனுமதியுடன் கலைப்பீடத்தின் 40வது அணி மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், அனைத்து மாணவர்களையும் இணைந்து கொள்ளுமாறும், அனைத்து விர தங்களையும் சிறப்பாக பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிப்பதற்கு ஆதரவு வழங்குமாறும் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி5)

கொரோனாவிலிருந்து விடுபட வரணியில் விசேட வழிபாடு

கொடிகாமம், டிசெ. 23

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம் பெற்றது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையின் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் நேரடி ஒலிபரப்பாகியிருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் கொவிட் - 19 தாக்கத்தால் அல்லல்படும் மக்களின் நலன் வேண்டி ஆலயங்களில் விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-159)



பண்டிகைக் கடமையில் 9 ஆயிரம் பொலிஸார்

கொழும்பு, டிசெ.23

பண்டிகைக் காலங்களில் பொலிஸ் வாகனங்களை கடமைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதற்கென 9 ஆயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த விசேட நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

இனி எமக்கே மக்கள் ஆணை

சஜித் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 23

இனி நடைபெறும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்திக்கே மக்கள் அமோக ஆணையை வழங்குவார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



பதுளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் சமகால அரசியல் நிலவரங் கள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை முன்வைப்பதில் இந்த அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. எனவே, எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் பிரதான எதிர்க்கட்சிக்கே மக்கள் அமோக ஆணை வழங்குவார்கள் என நம்புகின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்கும் கட்சி கிடையாது. குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்தத் தரப்புடனும் நாம் கூட்டணி வைத்துக்கொள்ளமாட்டோம். எனினும், எமது மக்கள் சார்பு கொள்கைகளை ஏற்று செயற்படக்கூடியவர்கள் எம்முடன் இணைந்து பயணிக்கலாம்' -என்றார். (ம-44)

இன்றைய நாள்

மேடம்: பணியாளர்கள் விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பெண்களுக்கு பிள்ளைகளால் ஏற்பட்ட மனஅழுத்தம் அகலும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கவே செய்யும்.

இடபம்: தொழிலில் போட்டிகளை தாண்டி ஓரளவு வெற்றி பெறுவீர்கள். வேலைச் சுமையால் சோர்வு அடைவீர்கள். மனதில் அமைதி நிலவும். அலைச்சல் கூடுதலாக இருப்பினும் ஆதாயம் பற்றிக் குறை இல்லை.

மிதுனம்: போராடி வெற்றி பெறுவீர்கள். புதிய பாதை புலப்படும். விட்டுப்போன ஒப்பந்தங்கள் மீண்டும் கைக்கு கிடைக்கலாம். அத்தியாவசியப் பொருள்களை வாங்கி மகிழும் வாய்ப்பு உண்டு.

கடகம்: செல்வாக்கு உயரும். குடும்பத் தேவையை நிறைவு செய்வீர்கள். உங்களின் புதிய திட்டத்தை நிறைவேற்ற மாற்றினத்தவர்கள் உதவுவர். எண்ணங்கள் நிறைவேறும். கோபத்தைக் குறையுங்கள்..

சிம்மம்: எதிர்கால நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். பேச்சில் மிகுந்த அக்கறை தேவை. பணியில் அலட்சியம் வேண்டாம். பணவரவு திருப்தி தரும்.

கன்னி: குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிப்பதால் நிம்மதி ஏற்படும். சுபச்செய்தி வந்து சேரும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எதிலும் பதறாமல் முடிவுகள் எடுப்பது நல்லது. கவலை குறையும்.

துலாம்: உடல்நலம், மனநலம் நன்றாக இருக்கும். உற்சாகமாக செயல்படுவீர்கள். சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை இனம் காண்பீர்கள். ஆதாயமும், அதரவும் கிடைக்கும்.

விருச்சிகம்: பெண்களின் நீண்ட நாள் பிரச்னைகள் முடிவுக்கு வரும் நாள். மகள் / மருமகள் மூலம் இனிக்கும் செய்தி வந்து சேரும். எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள்.

தனுசு: தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். நிம்மதி உண்டு. நண்பர்கள் நல்ல செய்தியைத் தருவர். யாரையும் பகைக்காதீர்கள். ஆர்வம் அதிகரிக்கும்.

மகரம்: சோர்வு நீங்கி உற்சாகம் அடைவீர்கள். அமைதி திரும்பும். அரை குறையாக நின்ற வேலைகள் முழுமையாக முடியும். இழந்த வாய்ப்புகள் தேடி வரும். புது அத்தியாயம் தொடங்குவீர்கள்.

கும்பம்: சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். திறமையையும், உழைப்பையும் பயன்படுத்தி முன்னேறுவீர்கள்.

மீனம்: அலுவலகப்பணிகளில் அலட்சியம் காட்டுவதை தவிர்ப்பது நலம். சிலர் உங்களை மதிக்காமல் போவார்கள். யாரையும் நம்ப வேண்டாம். வியாபாரிகள் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுக.

2021 உங்கள் ராசிக்கு எப்படி?

ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்

இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வ மாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித் திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள் ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத் தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொரு வருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக் கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

கன்னி ராசிக்காரர்களுக்கு வரவிருக்கும் 2021ஆம் ஆண்டு எப்படி இருக்கும்? என்கிற ஆர்வம் நிச்சயம் இருக்கும். இதுவரை ஆட்டிப் படைத்துக் கொண்டி ருந்த 2020ஆம் ஆண்டு முடிய இருக்கும் நிலையில் இனி வரும் காலங்களில் வசந்தம் வீசுமா? என்கிற எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருந்த உங்களுடைய ராசிக்கு ஆண்டின் தொடக்கத்தில் செவ்வாய் பகவான் எட்டாம் வீட்டில் அமர்ந்திருப்பது சில பிரச்சனைகளை ஏற்படுத்தும். சனி பகவான் ஐந்தாம் வீட்டில் இருப்பார். ராகு, கேது முறையே 9 மற்றும் 3வது வீட்டில் அமர்ந்து இருப்பார்கள்.

குரு பகவான் ஐந்திலிருந்து பின்னர் பெயர்ச்சியாகி 6 மற்றும் 7வது இடத்தில் இந்த வருடம் இருப்பார்கள். இந்த கிரக அமைப்பின்படி திடீர் அதிர்ஷ்டங்களும், எதிர்பாராத தோல்விகளையும் சந்திக்கக்கூடிய வாய்ப் புகள் உண்டாகும்.

குடும்பம்: குடும்பத்தைப் பொறுத்தவரை கன்னி ராசிக் காரர்களுக்கு உங்கள் ராசியிலிருந்து 5ஆம் வீட்டில் சனிபகவான் அமர்ந்திருப்பதால் குடும் பத்தை விட்டு தள்ளி இருக்கும் சூழ்நிலை ஏற்படலாம். இதனால் குடும்பத்தின் மீது இருக்கும் பற்றும் குறைவதற்கு வாய்ப்புகள் உண்டு. அவர்க ளுக்கென தனியாக நேரம் செலவிட்டால் வர இருக் கும் பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். கணவன் மனைவிக்கு இடையே நல்ல புரிதலை உண்டாக்க முயற்சி செய்ய வேண்டும்.

செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு குடும்பத்தில் சுபகா ரிய விடயங்களெல்லாம் நடைபெறும் யோகம் உண்டு. மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

வியாபாரம் மற்றும் தொழில்: தொழில் மற்றும் வியா பாரத்தை பொறுத்தவரை கன்னி ராசிக்காரர்களுக்கு நல்ல பலன்கள் உண்டாகும். சிறந்த முடிவுகளை எடுப்பதற்கான முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நீங்கள் வெவ்வேறு துறைகளில் இருக்கும் நபர்களு டன் தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் அமையும். அவர்கள் மூலம் அனுகூலமான பலன் களை பெறுவீர்கள். உங்களிடம் பணிபுரிபவர்களிடம் இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து நல்ல அபிப்ராயம் உண்டாகும். தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது மூலம் நல்ல முன் னேற்றத்தைக் காணலாம்.

உத்தியோகம்: உத்தியோகத்தை பொறுத்தவரை கன்னி ராசிக்காரர்கள் ஆண்டின் தொடக்கத்தில் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். பின்னர் ஏப்ரல் மாதத் துக்குப் பிறகு சிறுசிறு சண்டை சச்சரவுகளும், தேவை யற்ற பிரச்சினைகளும், அதனால் வரும் மன உளைச்சலும் பாதிப்புகளை உண்டாக்கும். வார்த்தை களை விடுவதற்கு முன் சற்று சிந்தித்து செயல்படுவது உத்தமம். உங்களுடைய நல்ல குணத்தைக் கூட திரித்து தவறானவர்களாக காட்டி விடக்கூடிய அபாயம் உண்டாகும் என்பதால் அதிக அளவு பொறுமையுடன் செயல்படுவது மிகவும் நல்லது. செப்ரெம்பர் மாதத் துக்குப் பிறகு உங்களுடைய புதிய புதிய முயற்சிகளுக்கு வரவேற்புகள் ஏற்படும்.

பொருளாதாரம்: கன்னி ராசிக்காரர்களுக்கு பொரு ளாதார ரீதியான ஏற்ற இறக்கங்களை சமாளிப்பதற்கு நல்ல திறமை உண்டு. ஆண்டின் தொடக்கத்தில் பண ரீதியான விஷயத்தில் பெரும் சிக்கல்களை சந்தித்தா லும், ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு ஓரளவுக்கு சிறப்பா கவே அமைய இருக்கிறது. திடீர் அதிர்ஷ்டங்களும், யோகங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அமை யலாம். வரும் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொண்டால் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும்.

பெண்களுக்கு: பெண்களைப் பொறுத்தவரை கன்னி ராசிக்காரர்களுக்கு நல்ல பலன்கள் உண்டாகும். இதுவரை உங்கள் மனதில் இருந்து வந்த குழப்பங் கள் நீங்கி தெளிவு பிறக்கும். கணவன் மனைவிக்கு இடையே இருக்கும் அன்னோன்யம் அதிகரிக்க வாய்ப்புகள் உண்டு. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சி செய்வீர்கள். நீண்ட நாள் தடைப் பட்டு இருந்த சுபச்செய்தி ஒன்று கிடைக்கும் யோகமும் உண்டு. தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

பரிகாரம்: கன்னி ராசிக்காரர்கள் வெள்ளிக்கி ழமை தோறும் துர்க்கை அம்மனை வணங்கி வருவது சிறப்பான பலன்களைக் கொடுக்கும். எதிர்பார்த்தவை கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டாகும்.

மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.23

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள் ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி வரையான 14 நாள்களுக்கு அவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு மட்டக்க ளப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. ரிஷ்வான் உத்தரவிட்டுள்ளார்.

இவர் ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில், சந்தேகத் தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் சாட் சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோ சனைக்கு அமைய கடந்த மாதம் 12 ஆம் திகதி கைது செய்யப் பட்டார்.

இந்த நிலையில் வழக்கு விசா ரணை நேற்று இணையவழியாக மேற்கொள்ளப்பட்டபோதே விளக் கமறியல் நீடிக்கப்பட்டுள் ளது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

மனித உரிமைகளைப் பாதுகாக்க ஐ.நா.வுடன் கைகோர்க்க வேண்டும்

அமெரிக்காவிடம் கோருகிறது சர்வதேச மன்னிப்புச்சபை

கொழும்பு, டிசெ.23

இலங்கை தொடர்பில் அமெரிக்கா மீண் டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேர வையுடனான தனது ஈடுபாட்டை புதுப்பிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் அமெரிக் காவுக்கான தேசிய பரப்புரை இயக்குநர் ஜோன்லின் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஆபிரிக்கா உலக சுகாதா ரம் உலக மனித உரிமைகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் தொடர்பான சனப் பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகார குழுவின் துணைகுழுவுக்கு சமர்பித்துள்ள எழுத்து மூல வாக்குமூலத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை, ரம்ஜி ராசீகுக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிட வேண்டும், சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ் புல்லாவை விடுதலை செய்யவேண்டும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் ஆகிய விடயங்கள் தொடர்பி லும் காணாமல் போனவர்களின் குடும் பத்தவர்கள், அவர்கள் சார்பில் குரல் கொடுப்பவர்கள் மற்றும் அவர்களுடைய சட்டத்தரணிகள் ஆகியோர் பாதுகாக்கப்ப டுவதை இலங்கை உறுதி செய்யவேண் டும் எனவும் அமெரிக்கா வேண்டுகோள் விடுக்கவேண்டும் என மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந-இ)

விபத்தில் தந்தை, மகன் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.23

ஹொரண கொழும்பு வீதியின் ஜாலியகொட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தந்தை யும் நான்கு வயது மகனும் உயிரிழந்துள்ள னர்.

தாய் காயமடைந்த நிலையில் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

கதிர்காமம் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, டிசெ. 23

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை இணைத்துக் கொண்டு கொழும்பு பொரளையிலிருந்து பஸ்ஸில் கதிர்காமம் சென்ற 49 பேர், மத்தள பகுதியில் வைத்து பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொரளை லெஸ்லி ரணகல மாவத்தை, சர்ப்பன்டையின் வீதி, மெகசீன் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில், நான்கு பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது. (ரி5-இ)

மரண அறிவித்தல்

பிறப்பு
24
03
1956

இறப்பு
22
12
2020

திருமதி நாகேஸ்வரி சிவபாலன்

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சிவபாலன் நேற்று(22.12.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிவபாலன் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்தினி, சுகந்தினி, காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் சிறிசங்கர் (பிரான்ஸ்) ரவிசங்கர் (பிரான்ஸ்) கமலபவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் இராசம்மா, கமலாம்பிகை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சத்தியானந்தம் மற்றும் கமலதாசன், குமுதினி, றஞ்சித்பாபு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், விதுர்சன், கனிஸ்ரன், சரணிகா, மதுசாந், சஸ்மிதா, கவிசன், திரிஜா, அபிஷா, அஸ்வின், சபிர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், செல்லத்தம்பி, தம்பிராசா மற்றும் இராசமணி, கனகம்மா, குணரெத்தினம், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், வீரசிங்கம் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2020) புதன்கிழமை பிற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



சீனியர் சுப்பிரமணியம்

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் சிவபுரம் அவர்களின் அன்பு மகனும், அமரர். இராசையா பரிமளம் அவர்களின் அன்பு மருமகனும், அரியமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான (முத்துக்குமார், கனகசபை, இராசதுரை, சபாரட்ணம், பொன்னம்பலம்) மகேஸ்வரி, சுந்தரலிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சசிகரன் (ஜேர்மனி), சுதாஜினி (சுவிஸ்), அமரர் சுதாகரன், சுபாஸ்கரன் (சுவிஸ்), சுகந்தினி (நோர்வே) அவர்களின் அன்புத் தந்தையாரும், தயாமதி, சத்தியசீலன், அனுஷா, வேதானந்தன் ஆகியோரின் மாமனாரும், சாலினி, சாரங்கினி, சயந்தினி, சௌமியா, கீர்த்தியா, ஆரூரன், ஆதீசன், சன்சியா, சஜித், சாம்பவி, சமரன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2020) புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பள்ளஞ்சீமா,
ஏழாலை மேற்கு, ஏழாலை.
021 2059015.

தகவல்:
குடும்பத்தினர்.

விமானப் பயணிகளுக்கான நடைமுறையில் மாற்றங்கள்

கொழும்பு, டிசெ.23

வெளிநாட்டு அமைச்சு, குடிவரவு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவை இணைந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கைக்கு வரும் பயணிகளுக்கான நடைமுறையில் மேலும் சில திருத்தங்களை கொண்டுவந்துள்ளன. இவை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள், நோயாளிகள், குறுகிய கால விசாக்களையுடையவர்கள், அரசாங்க மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்காக, அரச தனிமைப்படுத்தல் வசதிகளுக்கான விஷேடமாக மீளழைத்து வரும் விமானங்களை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்யும் எனத் தெரிவிக்கப்படடுள்ளது. (வ-இ)

மரண அறிவித்தல்

திரு. கதிர்காமு கோபாலபிள்ளை

மண்ணில் : 05.02.1936 விண்ணில்: 22.12.2020



யாழ் இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் கதிர்காமு கோபாலபிள்ளை அவர்கள் நேற்று (22.12. 2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு தங்கம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பூமலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், சிவசோதி (கனடா), சிறிகரன் (கனடா), மகேஸ்வரன் (இலண்டன்), சுகந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தர்மினி (கனடா), சுபோதினி (கனடா), சுஜந்தினி (இலண்டன்), பிரேமகுமார் (நீர்ப்பாசன பணிப்பாளர், வட மாகாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்சினி (கனடா), நிருசினி (கனடா), கஜானன் (கனடா), ககேசன் (கனடா), மிதேஷா (இலண்டன்), சஸ்வதன் (இலண்டன்), மிஹிரன் (இலண்டன்), புராதனி (கொழும்பு), மர்த்தனி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2020 அன்று பி.ப 2.00 மணியளவில் இணுவில் பூவோடை மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்.**
தொலைபேசி இலக்கம் **021 2244 362**

மரண அறிவித்தல்

திருமதி புஸ்பலதா (மலர்) பாலகிருஸ்ணன்

பிறப்பு : 03.10.1964 இறப்பு : 22.12.2020

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பலதா (மலர்) பாலகிருஸ்ணன் நேற்று (22.12. 2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் யோகம்மாவின் மகளும், காலஞ்சென்ற ராமசாமி லக்ஸ்மியின் மருமகளும், பாலகிருஸ்ணன் (பாலா- செல்வநாகபூஷணி அம்மன் -கந்தர்மடம்) வின் அன்பு மனைவியும், காண்டீபன், (விரிவுரையாளர்-IIS) தேனுஜா (பட்டதாரி பயிலுனர்) ஆகியோரின் அன்பு தாயாரும், சிந்துஜா (SDB Bank - சுன்னாகம்), பிரதீப் (C.E.B) ஆகியோரின் அன்பு மாமியாரும், கலாவதி (மொன்றியல்), சீலாவதி (ஜேர்மன்), அமரர் லோகநாதன் (மொன்றியல்), யோகநாதன் (மலர் ஸ்ரோர்ஸ்-மன்னார்), குணநாதன் (மொன்றியல்) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணமூர்த்தி, இந்திராணி, காந்திமதி மற்றும் சரோஜாதேவி, பரமேஸ்வரி, சரஸ்வதி, சோம சுந்தரம், பத்மநாதன், பத்மினி, பாக்கிராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2020) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

48, புகையிரத வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
075 6241 576

■ சுந்தரலிங்கம் துஷானி
மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை
4ஆம் வருடம்
யாழ்பாணப் பல்கலைக் கழகம்

பெண்கள் மீதான வன்முறை

21 ஆம் நூற்றாண்டிலும் அகலாத அரக்கத்தனம்

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது பெண்களுக்கு எதிராக முதன்மையாக அல்லது தனிப்பட்ட முறையில் நிகழ்த்தப்படும் வன்முறைச் செயல்களை மொத்தமாகக் குறிப்பிடுகின்றது. பாதிக்கப்படுபவரின் பாலினத்தை முதன்மைக் காரணமாகக் கொண்டு இத்தகைய வன்முறை குறிப்பிட்ட குழுவினரை குறிவைக்கின்றது.

பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 25ஆம் நாள் அன்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வரும் ஒரு சிறப்பு நாளாகும். உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்று பலவிதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளியுலகுக்குக் காட்டி அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் ஆகியன முன்வைக்கப்படுகின்றன.

ஐ.நாவின் பொதுச்சபை நவம்பர் 25ஆம் நாளை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்புக்கான நாளாக அறிவித்துள்ளது.

எதற்காக நவம்பர் 25?

டொமினிக்கன் குடியரசில் 1960ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி மிராபெல் சகோதரிகள் என அழைக்கப்படும் மூன்று சகோதரிகள் அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்காக அந்த நாட்டின் அன்றைய ஆட்சியாளர் ரபாஜெல் நருஜிலியோவின் (1930 1961) உத்தரவின் பேரில் படுகொலை செய்யப்பட்டனர். பாதிக்கப்படும் பெண்களுக்கு எதிராக இவர்கள் குரல் கொடுத்தமையின் காரணமாகவே இப்படுகொலை இடம்பெற்றது. 'மறக்கமுடியாத வண்ணத்துப் பூச்சிகள்' என பின்னர் புகழ்பெற்ற இவர்கள் தென் அமெரிக்காவின் பெண்களுக்கு எதிரான வன்முறைக் கொடுமையின் சின்னமாக மாறினார்கள். கடந்த 1980ஆம் ஆண்டு முதல் அவர்களின் படுகொலையை நினைவு கூறுவதற்காகவும் பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்சியை ஏற்படுத்துவதற்காகவும் உலகளாவிய ரீதியில் செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இந்தச் செயற்பாடுகள் மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதி முடிவடையும். இத்தினத்துக்காக ஐ.நா சபை ஒவ்வொரு வருடமும் வன்முறைகளைத் தடுப்பதற்கான தொனிப்பொருளை உருவாக்கி உலகம் முழுவதும் உள்ள பெண்களுக்கு விழிப்புணர்வூட்டி வருகின்றது.

பல்வேறு விரிந்த வகைப்பாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல விரிந்த வகைப்பாடுகளில் அடங்கும். 'தனிநபர்களால் நிகழ்த்தப்படுபவையும், அரசுகளால் நிகழ்த்தப்படுபவையும் இவற்றுள் அடங்கும். தனிநபர்களால் நிகழ்த்தப்படுபவற்றின் வகைகளில் வன்கல்வி, குடும்பவன்முறை, பாலினத்துன்புறுத்தல், கருத்தரிப்பு முறைகளின் கட்டாயப்பயன்பாடு, பெண் சிசுக்கொலை, பால்தெரிவு, கருக்கலைப்பு, மகப்பேற்று வன்முறை, திரள்வன்முறை, மரபுவழி மற்றும் சமூகசெயல்முறைகளாக கௌரவக்கொலை, வரதட்சணைக் கொலை, பெண்ணுறுப்பு சிதைப்பு, கடத்தல் கலியாணம், கட்டாயக்கலியாணம், பால்யக்கலியாணம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவைதவிர பெண்களைக் கடத்துதல், கட்டாய விபச்சாரம், போர்களின் போதான வன்புணர்வு போன்ற பல வன்முறைகள் கட்டமைக்கப்பட்ட குற்றப்பிணையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் எவ்விதமான வன்முறையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததே.

இல்ல வன்முறை

இல்ல அல்லது வீட்டு வன்முறை என்பது ஒரு குடும்பத்தின் அங்கத்தவர் வேறொரு குடும்பத்தின் அல்லது அதே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினரொருவரை உளவியல், பாலியல், மனவெழுச்சி, சமூகவியல் மற்றும் பொருளாதார ரீதியில் கட்டுப்படுத்தல், ஆக்கிரமித்தல் அல்லது துஷ்பிரயோகம் செய்தலைக் குறிக்கும்.

தேசியத்தை, வகுப்பை, சாதியை, இனத்தைக் கருத்தில் கொள்ளாது குடும்பங்களில் சம்பவிக்கின்றது. பெண்கள் அவர்களது கணவர்கள், ஆண் நண்பர்கள், பெற்றோர்கள், சகோதரர்கள், மாமன்மார்கள் ஆகியோரால் இலக்கு வைக்கப்படக்கூடும். பெண்பிள்ளைகளும் வீட்டிலான வன்முறைகளுக்கு ஆளாக்கப்படக் கூடியவர்களே. வன்முறையானது பாதிக்கப்பட்டவரிடமிருந்து சுய கௌரவத்தை முற்றாக இல்லாமல் செய்வதுடன் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது. இல்ல வன்முறை என்பது பிரதானமாக ஆண்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் பொருட்டு பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாகும். இல்லங்களில் இடம்பெறும் இல்ல வன்முறையானது உடலியல், பாலியல் வன்முறை அச்சுறுத்தல், பயமுறுத்திக் கட்டாயப்படுத்தல் என பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாலியல் வன்முறை

வன்புணர்ச்சி என்பது பெண்ணொருவரது, பிள்ளையொன்றின் பாலியல் உறுப்புகளில் உடல்ரீதியான தாக்குதல்கள், பாதிக்கப்பட்டவர் கர்ப்பத்தடை முறைகளைக் கட்டுப்படுத்தல், பாதுகாப்பான பாலியல் நடைமுறைகளைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் என்பனவற்றை உள்ளடக்கும். வன்புணர்ச்சியானது அவர்களது விருப்பத்துக்கு எதிராக பாலியல் வல்லுறவு கொள்ளுதல் என்பது ஆகும். இது பல வன்முறைகளுடன் தொடர்புடையது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது தனிப்பட்ட ஒருவரின் உடல் மீதான உரிமைமீறலாகும். வடமாகாணத்தில் சிறுவர், பெண்கள் மீதான வன்முறைகள் அதிகளவு இடம்பெற்று வருகின்றன. ஆனால் இக்குற்றங்கள் குறைந்தோ முற்றுப்பெற்றமாதிரியோ தெரியவில்லை. இதனால் பயத்துக்கும் உளநெருக்கீட்டுக்கும் பெண்கள் உள்ளாக நேரிடுகின்றது.

மனவெழுச்சி மூலமான வன்முறை

வேண்டுமென்றே பாதிக்கப்பட்டவர்களின் சிந்தனைகளைக் குறுகவைக்கும், அவர்களை இழிவாக உணரவைக்கும் எல்லா எத்தனிப்புக்களும் இதில் உள்ளடங்கும். பாதிப்படைந்தவரை ஏனைய மக்கள், நண்பர்கள், குடும்பம் முன்னிலையில் வெட்கப்படுத்துதல் இவற்றில் அடங்கும்.

உளவியல் ரீதியான வன்முறை

உளவியல் ரீதியான வன்செயலானது பயமுறுத்தி பணம் பறிக்கும் அல்லது அவமானப்படுத்தும் நோக்குடன் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எவையேனும் அச்சுறுத்தல்களை உள்ளடக்கும்.

பொருளாதார ரீதியான வன்முறை

நிதியியல் ரீதியில் ஏற்படும் வன்முறைகள் இவையாகும். பாதிக்கப்பட்டவரின் பணம் அவரிடமிருந்து துஷ:பிரயோகம் செய்பவரால் அபகரிக்கப்பட்டு அவருக்கு ஏதேனும் தேவைப்படும் வேளைகளில் பணத்தைக் கேட்கும்போது அவர் பல துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுதலைக் குறிக்கும்.

பயமுறுத்தும் வன்முறை

துஸ்பிரயோகத்தின் ஓர் அங்கமாக பார்வையில் செயலில் அல்லது சமிக்ஞையின் மூலம் அவர்களது ஆதனங்களை அழிப்பதன் மூலம் அல்லது ஆயுதங்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் பெண்ணை அச்சமடைய வைத்தலை உள்ளடக்கலாம்.

வன்முறைகளுக்கு முகம்கொடுக்கும் பெண்கள், வன்முறையின் பின்னரான தம் வாழ்வில் ஏகப்பட்ட சவால்களைச் சந்திக்க நேரிடும். நம்பிக்கை இழத்தல், பதகளிப்பு, பதற்றம், குற்றவுணர்வு, வெட்கம், திருப்தியின்மை, பசியின்மை, தோல்வி, மீளஓட்டம், எதற்கும் உபயோகமற்றிருத்தல் என நினைத்தல், தாங்கள் எதைச் செய்தாலும் சரிவரச் செய்யவில்லை என்ற தாழ்வு உணர்வு அவற்றில் சில.

இவ்வாறான நிலமைகளில் காரணமாகவும்; ஏனைய நிர்ப்பந்திக்கப்பட்ட திருமணம், விவாகரத்து, கணவரின் மதுப்பழக்கவழக்கம், குடும்பத்தை தலமைதாங்கும் பெண்கள் ஆகியன காரணமாக பெண்கள் மீதான வன்முறையும், பாலியல் சமத்துவம் இன்மையும் காணப்படுகின்றது. நவீன உளவியலும் இவற்றை ஒத்த கருத்துக்களை நிலைநிறுத்துவதற்கு உதவியுள்ளதென்று பல பெண்ணிலைவாதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் பெண்ணின் உடற்கூறுகள் அவளது உளப்பாங்கைத் தீர்மானிப்பதனால், அது அவளுடைய ஆற்றல்களையும், கடமைகளையும் நிர்ணயிக்கின்றது என்பது உளவியற் கருத்தாகும். 21ஆம் நூற்றாண்டில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்வது வேதனையானது. இன்றைய காலத்தில் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அறியாமையாலும் அச்சத்தாலும் அவை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. எனவே பெண்ணை பெண்ணாக மதிப்போம். சமூகத்தினுடைய பார்வையை மாற்றுவோம். காலம் காலமாக வரும் பெண்கள் பற்றிய அபிப்பிராயத்தை மாற்றுவோம். வன்முறையை இல்லாது ஒழிப்போம்.

பணி நயப்பும் பிறந்தநாள்
வாழ்த்தும்
எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி உதயகுமாரி
ஜெயச்சந்திரன்
(Sp.Trained (Primary), B.Ed, SLTS -1)

Congratulations
31 ஆண்டுகள் அளப்பரிய ஆசிரியப் பணியாற்றி
22.12.2020 இல் பணி ஓய்வுபெற்ற ஆசிரியை
அவர்களின் பணியை போற்றுவதோடு ஓய்வு காலம் சிறக்க
எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இன்றைய 57 ஆவது பிறந்தநாள் நல்வாழ்த்துக்களும் உரித்தாக
பாடசாலைச் சமூகம்
யா/வரணி சைவப்பிரகாச வித்தியாலயம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்
இளங்கலைமாணி (B.A) தமிழியல்
(Tamilology) சிறப்புப் பட்டம்!
• தொழில் வாய்ப்பா? பதவியுயர்வா? அனைவரும் விண்ணப்பிக்கலாம்
• க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி (பழைய பாடத்திட்டம் 4 பாடங்களில்)
• உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப் படிப்பைத் தொடர முடியும்.
• இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.
2021 - 2023 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள்
ஜனவரி மாதம் Zoom ஊடாக ஆரம்பமாகும்.
பதிவுகளை மேற்கொள்ளும்
இறுதி திகதி 10.01.2021 வரை மட்டும்
வவுனியாவில்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
A9 வீதி, புளியங்குளம்.
071 315 6109
யாழ்ப்பாணத்தில்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
077 805 1173, 070 305 1173

தடுப்பு மருந்து கொள்வனவு; பேச்சுகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.23
கொரோனாவுக்கான தடுப்பு மருந்தை ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற வுள்ளது.

இதன்படி எதிர்வரும் வாரம் ரஸ்ய தூதுவருடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

மேலும், பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தால் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட மருந்துகள் கிடைப்பதற்கு முன்னரே ரஸ்ய மருந்தான ஸ்புட்னிக் வி தடுப்பூசி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் நாட்டுக்கு கொண்டுவரமுடியும். இதேவேளை தனியார் மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடனும் பேச்சுகள் இடம்பெறுகின்றன.

தனியார் துறையினர் ஊடாக மருந்துகளை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது மொடேர்னா மற்றும் பைசர் நிறுவனத்தின் மருந்துகள் மற்றும் சீன மருந்துகள் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. விலை, சேமிப்பதற்கான கால நிலை போன்றன அடிப்படையில் எந்த மருந்தை விரைவில் இலங்கைக்கு கொண்டுவரமுடியும் என தீர்மானிக்க வுள்ளோம் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந)

திருத்தம்

பெறுகை அறிவித்தல்
சபைநிதி வேலைத்திட்டம் - 2020
நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

10.12.2020ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

1. கேள்வி அறிவித்தல் அட்டவணையில் கேள்வி எண் NP/14/41 (3)2/CF/39/2020 இற்குரிய மதிப்பீட்டுத் தொகையானது 0.450 மில்லியன் என திருத்தம் செய்யப்படுகின்றது.

தலைவர்,
பெறுகைக்குழு
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
23.12.2020

கண்ணீர்க் காணிக்கை

எமது பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் பணிபுரியும்
திருமதி சு.தனுஜா
அவர்களின் அன்புத் தந்தையார்
சோமசுந்தரம் புவனசுந்தரம்
மலர்வு 17.10.1949
உதிர்வு 20.12.2020
பிரிவால் துயருறும்
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

கண்ணீர்க் காணிக்கை

எமது பிரதேச செயலகத்தில்
உதவித்திட்டமிடல் பணிப்பாளராக
பணிபுரியும் திரு.வீ.சிவகுமார்
அவர்களின் தந்தையார்
கதிரித்தம்பி வீரசிங்கம்
எம்மோடு 11.02.1935
எமைவிட்டு 21.12.2020
துயருடன்
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, டிசெ.23

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாளங்குடாவில் சக்திவாய்ந்த கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது என காத்தான்குடி பொலிஸ் நிலைய சிறுகுற்ற தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி கே.எல்.எம்.முஸ்தபா தெரிவித்தார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ் 25.11.1933
கண்கலங்க 04.01.2020
திருமதி A.K.சுந்தரம் செல்வலட்சுமி
திதி: பூர்வபட்ச நவமி (23.12.2020)
புன்முறுவல் காட்டியே முகமன் செய்வீர்கள் அம்மா
குறுநகை ததும்ப உரையாடுவீர்களே அம்மா
சுறுசுறுப்பாக சுயமாய் நடமாடினீர்களே அம்மா
ஈடு இணையற்ற நிம்மதி நாடி
நீடு துயில் கொண்டதேனோ அம்மா!
"லஷ்மி பவனம்"
கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.
என்றென்றும் உங்கள் நினைவுகளைச் சுமக்கும்
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 10 • 09 • 1934
தேவுலகில் 04 • 01 • 2019
அமரர் திருமதி
தவமணி பசுபதி
திதி: மார்கழி மாத வளர்பிறை நவமி
எம்மை வாழ வைத்த குலதெய்வமே!
எனதருமை அம்மாவே!
நீங்கள் எம்மைவிட்டு ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகளைச் சுமந்தே நாம் இங்கே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
துர்க்கை அம்மனை வேண்டும்
மானிப்பாய்.
குடும்பத்தினர்

வீடு வாடகைக்கு
மன்னார் பிரதான வீதியில் நாவற்குழி சந்தியிலிருந்து 1km தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777 570 211

தேவை
மில் வேலை தெரிந்தவர்கள், பொதி செய்பவர்கள்.
104, மாப்பியன் மில் வீதி சுதுமலை, மானிப்பாய்
தொடர்புக்கு: 0777 722 215

வாடகைக்கு
யாழ். வைத்தியசாலை வீதியில் முதலாம் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. கடைகள் அலுவலகங்களுக்கு ஏற்றது.
077 828 1956

வீட்டுப்பணிப்பெண் தேவை
கோண்டாவில் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றுடன் வீட்டில் தங்கியிருந்து வீட்டுப் பணிகள் செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண் உடன் தேவை.
021 222 5010

விற்பனைக்கு
யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு காணியும், 4 பரப்பு காணியும், 3 பரப்பு காணியும், யாழ் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 6 பரப்பு காணியும், 3 பரப்பு காணியும் வீடும், யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்பு காணியும் வீடும், யாழ் கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
0777 232 535

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ 41 வயது இளமை தோற்றத்துடன் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்பில்லை.
தொடர்புகளுக்கு: 077 905 8615
வைபர் & வாட்ஸ்ஆப்

ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 07 . 1948

உதிர்வு 23 . 12 . 2011

அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

(உரிமையாளர் – விநாயகர் ரேணிங் வேக்ஸ்)

கண்மூடித்திறப்பதற்குள் ஒன்பது ஆண்டுகள் ஆகினவோ!
ஆறவில்லை மனது
உங்கள் அன்பு முகம் காணக் கனிவும் கபீரமும்
நிறைந்த குரல் கேட்க ஏங்கி
கூடி வாழ்ந்த அந்நாள்கள் இனி வராதா எனத் தவிக்கின்றோம்
அப்பா! இறையடியில் அமைதிகாணச் செபிக்கின்றோம்.
எங்களுக்காய் இறையாசீர் வேண்டிடுவீர்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

என்றும் உங்கள் உறவுகளுடன் கலந்திருக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மரண அறிவித்தல்



பிறப்பு . 21 . 07 . 1953

இறப்பு . 21 . 12 . 2020

கந்தசாமி நித்தியானந்தன்

பன்னாலை, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நித்தியானந்தன் அவர்கள் 21.12.2020 அன்று சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்வபூரணம் தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தசீதரன் (சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், ஆசிரியர்), றதிதரன் (தரன் பந்தல்), சுகிதரன் (கட்டார்), றகுதரன் (தேசிய சேமிப்பு வங்கி, நெல்லியடி), தனுஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), பகீதரன் (கட்டார்), கஜிதரன் (ஆசிரியர், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை), பாபுதரன் (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், துஷ்யந்தினி, இராஜகுமாரி, கஜேந்தி (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), நந்தினி (விது பிறிசியர்ஸ் கலர்லாப்), புஸ்பன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்), மரீன்ஷங்கா (ஆசிரியர், யா/வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனும், தணிகையன், சாருகாசினி, தசானிகா, வர்மிதா, அதீதன், பிரசன்யா, வேணுஜா, தரன்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.12.2020) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 3956158, 0776392636

பன்னாலை,
தெல்லிப்பளை.

மரண அறிவித்தல்

ஸ்ரீதர் விக்னேஸ்வரி (ரதி)

பிறப்பு : 27.06.1964 இறப்பு : 22.12.2020

மானிப்பாய் மேற்கை பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீதர் விக்னேஸ்வரி (ரதி) நேற்று (22.12.2020) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் கனகரட்னம் மற்றும் கனகரட்னம் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், ஸ்ரீதரின் அன்பு மனைவியும், சன்ஜீவிதா, மிதுஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்செல்வம், பாலபாஸ்கரன், அருளேஸ்வரி, சத்திய சீலன், இலங்கேஸ்வரி, காலஞ் சென்றவர்களான அருட்செல்வம், சிவகுமார், ரட்ணகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தாகரனின் மாமியாரும், பிரணவன், சோபிதாவின் பேர்த்தியும், நிர்மலன், தமயந்தி, ரோஜா, வேந்தன் பத்மினி, சதீஸ், மஞ்சுளா, ரகுபரன் திருவேணி, ராஜேஸ்வரன் ரோகினி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2020) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

தேர்தல் ஆணைக்குழு

"நாட்டின் எதிர்காலம் வாக்காளர்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது"
வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்

உங்களுக்குத் தெரியுமா ?

* 2020 வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கைகளின் ஆரம்பப் பணிகள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்கள் தவிர்ந்த
* அதற்குரிய ஆவணங்கள் 2020 திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் 2021 சனவரி மாதம் 19 ஆந் திகதி வரையில் காட்சிக்கு வைக்கப்படும்.
* உங்களது பெயர் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாவெனப் பரிசீலித்துப் பார்த்து, பதிவு செய்யப்படவில்லையாயின் உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
* தமைகமை இல்லாதவரொருவர் ஏதேனும் வீடொன்றின் கீழ் பதிவு செய்யப்படுவதற்காக கணக்கெடுக்கப்பட்டிருப்பின் உங்களுக்கு ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும்.

உரிமைக் கோரிக்கை சமர்ப்பிப்பது அல்லது ஆட்சேபனை தெரிவிப்பது எவ்வாறு ?

* விண்ணப்பப்படிவங்களை மேற்குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தும் இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளவும். தேருநர் இடாப்பையும் இந்த இடங்களில் பரிசீலித்துப் பார்க்கவும் முடியும்.
  - ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்.
  - ஒவ்வொரு பிரதேச செயலகம் .
  - ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனம்
  - ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம்

WWW.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழு இணையத்தளத்திலிருந்தும் உங்களதுபெயரை, பதிவு செய்யப்பட்ட மாவட்டத்துடன் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உட்சேர்ப்பதன் மூலம் 2020 தேருநர் இடாப்பில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதாவென்பதை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

- உங்களது விண்ணப்பப்படிவத்தை உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2021 சனவரி 19 ஆந் திகதிக்கு முன்னர் உரிய தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தொலைபேசி இல. : 011 - 2868441, 42, 43 தேர்தல் ஆணைக்குழு
மின்னஞ்சல் முகவரி : info@elections.gov.lk சரண மாவத்தை, இராஜகிரிய,
இணையத்தளம்: : WWW.elections.gov.lk 23.12.2020

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.

கொழும்பு மாநகர	011-236 9437	வவுனியா	024-222 2311
கொழும்பு மாவட்ட	011-236 9438	முல்லைத்தீவு	021-206 1426
கம்பஹா	033-222 2047	மட்டக்களப்பு	065-222 4312
களுத்துறை	034-222 2266	அம்பாறை	063-222 4342
கண்டி	081-223 3187	திருக்கோணமலை	026-222 2304
மாத்தளை	066-222 2422	குருநாகல்	037-222 2369
நுவரெலியா	052-222 2325	புத்தளம்	032-226 5246
காலி	091-223 4028	அநுராதபுரம்	025-222 2551
மாத்தறை	041-222 2305	பொலன்னறுவை	027-222 2012
அம்பாந்தோட்டை	047-225 6248	பதுளை	055-222 2424
யாழ்ப்பாணம்	021-222 2655	மொணராகலை	055-227 6315
கிளிநொச்சி	021-228 5664	கேகாலை	045-222 2023
மன்னார்	023-222 2289	இரத்தினபுரி	035-222 2561

சரியாகப் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி.
சுதர்ஷன் நிர்த்தனா
173புள்ளிகள்

செல்வன்.
தவசீலன் சாரங்கன்
167புள்ளிகள்

செல்வன்.
தயாபரன் கிருசிகன்
164புள்ளிகள்

எமது பாடசாலையில் இம்முறை (2020) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்ததோடு பாடசாலைச் சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்த **செல்வி.சுதர்ஷன் நிர்த்தனா (173), செல்வன். தவசீலன் சாரங்கன் (167) மற்றும் செல்வன். தயாபரன் கிருசிகன் (164)** ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்

செல்வன்.ரஜீவன் சதுர்ஷன்	-	157 புள்ளிகள்
செல்வன்.விஜயகுமார் சரண்ராஜ்	-	153 புள்ளிகள்
செல்வி.கோமேதகன் ரிஷானுகா	-	150 புள்ளிகள்
செல்வி.ஜெனிஸ்குமார் ஹரிசானிகா	-	143 புள்ளிகள்
செல்வன்.அகிலேசன் ரஜிந்தன்	-	140 புள்ளிகள்
செல்வி.ரவிதாஸ் அபி	-	140 புள்ளிகள்
செல்வன்.அருள்பிரகாசம் யுவிஷ்ரன்	-	132 புள்ளிகள்
செல்வி.சசிகுமார் லிக்ஷாயினி	-	125 புள்ளிகள்
செல்வி.ஜெயரூபன் துவாரகா	-	123 புள்ளிகள்
செல்வி.கிருஸ்ணதாசன் அபிவாரணி	-	119 புள்ளிகள்
செல்வன்.சசிகரன் சிபிராஜ்	-	113 புள்ளிகள்

Best Wishes

70 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர் விபரம்

செல்வன்.கணாதீபன் துஷியந்	-	94 புள்ளிகள்
செல்வி.லோகேஸ்வரன் தனுஷிகா	-	92 புள்ளிகள்
செல்வி.ஜிப்ரிபாத்திமா மின்ஹா	-	89 புள்ளிகள்
செல்வி.பஸ்மின் பாத்திமா பஸ்னா	-	79 புள்ளிகள்
செல்வன்.இதயகுமார் கம்ஷியன்	-	71 புள்ளிகள்

அத்துடன் இம் மாணவர்களுக்கு கற்பித்த வகுப்பாசிரியர் திருமதி.சோதீஸ்வரி பிரணவநாதர் மற்றும் வழிகாட்டிய அதிபர். ஆசிரியர்கள் மற்றும் ஊக்கமளித்த பெற்றோர்கள், நலன் விரும்பிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு கல்வியில் மேலும் பலசாதனைகள் படைக்க செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்.

48வது பிறந்தநாள் வாழ்த்து

தே.வைகுந்தன்

தென்னைப் பயிர்ச்செய்கை சபை

எமது பிராந்தியத்தில் 5 வருட அளப்பரிய சேவையை ஆற்றிவரும் யாழ் பிராந்திய முகாமையாளர் அவர்களிற்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவரை பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

Happy Birthday

கிளாலி கப்புறக சங்கம்
பளை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

1. முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2018

மேற்படி பரீட்சைகளினை 09.01.2021 (சனிக்கிழமை) தொடக்கம் 23.01.2021 (சனிக் கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 06.01.2021 (புதன்கிழமை) தொடக்கம் 08.01.2021 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
22.12.2020

48வது பிறந்தநாள் வாழ்த்து

Best Wishes

தேவராஜா வைகுந்தன்

பிராந்திய முகாமையாளர், தென்னை பயிர்ச்செய்கை சபை

தசாப்தம் கடந்த அரச பணியில் தன்நிகர் இல்லா
சேவையாளனே
மக்கள் நேயமுள்ள எங்கள் - தமிழ் மகனே
அன்பாக பழகும் எம் - பண்பாளனே
மக்கள் சேவையே மகத்தான சேவையென
அல்லும் பகலும் அயராது உழைக்கும் -
சமூக சேவையாளனே - நீர்
இன்றுபோல் என்றும் சிறப்புடன் வாழ
இப் பிறந்தநாளில்
மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
முல்லைத்தீவு மாவட்ட
தென்னை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும்
மக்களும்.

POSTGRADUATE DIPLOMA IN EDUCATION
(PART TIME) COURSE 2020/22

Applications are invited for the above course from those who possess undermentioned qualifications.

Qualifications to enter the course:
(I) A graduate from reputed university
(II) Age below 50 years on closing date of application.

NB: In selecting for the course, preference will be given to those employed in the teaching staff of a Govt. School/ Constituted Educational Institute/ Govt. or Private Sector Reputed Educational Institute

Application form is available in the University website **www.jfn.ac.lk.**

Applicants are requested to send the prescribed application form downloaded from the university website with the receipt obtained for the sum of Rs.1000.00 credited to the Peoples Bank account No. 162-1-001-8-0000902 of the University of Jaffna.

Course fee: **Rs.40.000.00(inclusive of all charges)**

Mode of selection: **Written test (General knowledge and Educational Proficiency) and Interview**

Closing date of application: **22.01.2021**

Selected candidates should get transfer to a school within 25 kilometer from University of Jaffna and should submit the letter of transfer on the date of registration for the course.

Perfected application should be sent by registered post to the Deputy Registrar, Faculty of Arts, University of Jaffna, Jaffna. The course name should be written on the top left hand corner of the envelope.

Applicants from the Govt. School/ constituted educational institute/ Govt. or Private Sector reputed Educational Institute should channel their application through the Principal/ Head of respective Institutions.

Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

Registrar
University of Jaffna

23.12.2020 புதன்கிழமை

கொரோனா தடுப்பூசியால் பெண்களுக்கு தாடி வளரும்

பிரேசில் ஜனாதிபதியின் கண்டுபிடிப்பு

பிரேசிலியா, டிசெ.23

கொரோனாவுக்கு எதிராக பைசர்பயோன்டெக் தடுப்பூசியை போட்டுக்கொள்ளும் பெண்களுக்கு தாடி வளரும் எனவும் அதைப் போட்டுக்கொள்வோர் முதலையாக மாறலாம் என்றும் பிரேசிலிய ஜனாதிபதி ஜயிர் போல்சொனாரோ கருத்துத் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று சாதாரண சளிக்காய்ச்சலே என்று தெரிவித்து வரும் அவர், தடுப்பூசியைத் தான் போட்டுக்கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் தடுப்பூசி இலவசம் என்றாலும் அதனைப் போட்டுக் கொள்வது கட்டாயமில்லை என்று அவர் தெரிவித்துள்ள போதும் மக்கள் தடுப்பு மருந்து போட்டுக் கொள்வது அவசியம் என்று அந்நாட்டின் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (வ-இ)

பைடனுக்கு தடுப்பூசி

வொஷிங்டன், டிசெ.23

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோபைடன் நேற்று முன்தினம் கொரோனாவுக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

அமெரிக்காவின் டெலாவேர் மாகாணத்தில் நியூவார்க் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் ஜோபைடனுக்கு பைசர் தடுப்பூசி நேரலையில் வழங்கப்பட்டது.

அதன் பின் கருத்துத் தெரிவித்த பைடன், மருந்து கிடைக்கும்பொழுது தவறவிடாது அதனைப் பெற்றுக்கொள்ளுங்கள் என நாட்டு மக்களை வலியுறுத்தியுள்ளார். (வ-இ)

புதியவகை கொரோனாவை பைசர் தடுப்பூசி அழிக்கும்

விஞ்ஞானிகள் நம்பிக்கை

பிரிட்டனில் உருவெடுத்துள்ள புதியவகை கொரோனா வைரஸை தற்போது பயன்பாட்டிலுள்ள தடுப்பு மருந்து களே கட்டுப்படுத்தும் என ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள சுகாதாரத் துறை விஞ்ஞானிகள் மற்றும் ஜேர்மனி சுகாதாரத்துறை அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான் தெரிவித்துள்ளார். புதிய வகை கொரோனா வைரஸையும் தற்போதுள்ள தடுப்பூசிகள் கட்டுப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

குறைந்த விலையில் முகக்கவசம்!

கொழும்பு, டிசெ.23

சதொச கிளை மற்றும் இணை நிறுவனங்கள் மூலம் தரமான முகக்கவசங் களைக் குறைந்த விலையில் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். மொத்த விற்பனையாளர்கள் 12 ரூபாவுக்கும் நுகர்வோர் 15 ரூபாவுக்கும் முகக்கவசங்களைக் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். சதொச நிறுவனத்தின் 15 ஆண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு சதொச தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அடுத்த வாரம் தொடக்கம் தொற்று நீக்கிகளையும் குறைந்த விலைக்கு விநியோகிக்க உள்ளோம் என அவர் இதன்போது கூறினார். (ற-இ)

எஹலியகொட பகுதியில் தொற்றாளர் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.23

இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பகுதியில், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எஹலியகொட பகுதியில் இதுவரை 310 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், இரத்தினபுரி நகர் எல்லைக்குள் மாத்திரம் கடந்த 3 தினங்களில் 76 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இரத்தினபுரி நகரில் 200 க்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 08 . 1954

மலர்வு 16 . 12 . 2018

கணபதி தனபாலசிங்கம்

கண்ணீரின் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஈராண்டாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்.
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் – நாங்களோ
எது செய்வதென்று தெரியாமல் தவிக்கின்றோம்.

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி நவமணி கோபாலகிருஸ்ணன்

மாலிசந்தி அல்வாயை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நவமணி கோபாலகிருஸ்ணன் நேற்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கோபாலகிருஸ்ணனின் அன்பு மனைவியும், தர்மலிங்கம், மகேஸ்வரி, இராசதுரை, இராசேந்திரம், காலஞ்சென்றவர்களான தங்கராசா, தியாகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கண்ணதாசன் (வைஷ்ணவி நகை பூங்கா), இராஜ்குமார் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (அமரர்), புருசோத்தமன் (பிரதேச செயலகம், பருத்தித்துறை) அமுதா (அரச கால்நடை வைத்திய அலுவலகம்-கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கௌசலா, மதிவதனி (பிரான்ஸ்), றிபோஸிகா (பிரதேச செயலகம், கரைதுறைபற்று) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜனியா, கம்சிகா, அஜீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2020 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் ஆலங்கட்டை இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கோபாலகம்'
மாலிசந்தி, அல்வாய் தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்.
021 226 1942,
076 750 1255

மரண அறிவித்தல்

அன்னரத்தினம் இரத்தினசிங்கம்

பிறப்பு : 17.07.1945 **இறப்பு: 22.12.2020**

யாழ் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னரத்தினம் இரத்தினசிங்கம் 22.12.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கார்த்திகேசு சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், நவமணியின் அன்புச் சகோதரியும், அமரர் இராசரத்தினம், அமரர் இராசமணி, இராஜேஸ்வரி, சிவராசா, சிவா (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நிறைநிலா (சுவிஸ்), வளர்மதி (ஆசிரியை, மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்), மதிவதனன் (லண்டன்), நிலாவதனி, மதிரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கொங்கேஸ்வரன் (சுவிஸ்), தயாபரன் (சமுர்த்தி அ.உ.பிரதேச செயலகம், தெல்லிப்பளை), பாலேஸ்வரன், சந்திரா, (லண்டன்), ரேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரவின், பிரமிதா, பிரகவன், துளசிதரன், திருஷாந்தி, டர்சிகன், லதுசன், றஜீசன், ஷஷ்மி, வினுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்.
077 594 9862,
077 467 0837

அரசியல்....

அந்தவகையில், கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் பலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மகசின் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் பலர் கொரோனாவுக்கு இலக்காகியுள்ளனர் என்ற தகவலை அவர்களின் குடும்பத்தினர் மிகவும் கவலையுடன் எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். அதையடுத்து பாதிக்கப்பட்ட கைதிகளின் நிலைமை தொடர்பில் ஐ.நாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். தமிழ் அரசியல் கைதிகள் போதிய மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளுடன் இல்லை என்றும், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கொழும்பிலுள்ள ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தைக் கேட்டுள்ளேன்.

கொரோனாத் தொற்று ஆபத்தையடுத்து சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்குமாறு அண்மையில் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆனால், அது தொடர்பில் அரசு அசமந்தப்போக்கில் இருந்த காரணத்தால் இன்று தமிழ் அரசியல்கைதிகள் கொரோனாவின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்' - என்றார். (ம-22)

கண்ணதாசனுக்கும்...

க.கண்ணதாசன் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

'கண்ணதாசனை வீடு அனுப்புவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தநிலையில் அவர் கந்தக்காடு கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

கொரோனா சிகிச்சை நடைமுறைகளுக்கு அமைய அவருக்கான தனிமைப்படுத்தல் காலம் நிறைவு பெற்றதும் அவர் வீடு திரும்புவார். கண்ணதாசனுடன் தொடர்பிலிருந்தவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மகசின் சிறைச்சாலையில் இடம்பெற்று வருகின்றன. (ம-22)

சுமந்திரனின்...

யாழ்ப்பாணம், டிசெ. 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால், விக்னேஸ்வரனுக்கும், கஜேந்திரகுமாருக்கும் வழங்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில், அது கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று கூறப்படுவதை நாங்கள் நிராகரிக்கிறோம். அந்த ஆவணம் எங்களிடம் கையளிக்கப்படவில்லை. அதன் உள்ளடக்கம் என்ன என்பதும் எங்களுக்கு தெரியாது. அப்படி இருக்கும் பொழுது அதை கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று கூறுவது ஏற்புடையதல்ல

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற இருக்கும் மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்தொடரில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டு இலங்கை அரசால் நடத்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும். எந்தவிதமான கால அவகாசத்துக்கும் இடமளிக்க முடியாது. இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். கடந்த ஆண்டு மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடரில் இதன் அடிப்படையில் எமது கட்சியால் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவராகிய நானும், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், திருமதி அனந்தி சசிதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் கையொப்பமிட்டு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டது. இலங்கை அரசை விசேடசர்வதேசவிசாரணைபொறிமுறையின் மூலம் விசாரணைக்குட்படுத்தல் வேண்டும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தல் வேண்டும், இலங்கைக்கு ஒரு விசேட அறிக்கையாளர் அமர்த்தப்பட்டு இவ்விடயங்கள் சம்பந்தமான அறிக்கைகள் சமர்ப்பித்து ஆராயப்படவேண்டும், கால அவகாசம் வழங்கலாகாது என்பன உள்ளடக்கம் பெற்றுள்ளன. இந்த நிலைப்பாட்டில் இருந்து ரெலோ பின்வாங்காது.

கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பது அங்கத்துவ கட்சிகளாகிய நாங்களும் சேர்ந்து அறிவிக்கின்ற முடிவாக இருக்குமே தவிர தனிப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அமைய முடியாது என்பதையும் வலியுறுத்துகிறோம். இந்த விடயத்தில் அர்ப்பணிப்போடு செயலாற்றும் எமது புலம்பெயர் மற்றும் சர்வதேச அமைப்புகளும் எல்லோரையும் உள்ளடக்கி ஒன்று படுத்திய கருத்துக்களை தயாரிப்பதில் முனைப்புடன் செயல்பட வேண்டும். நம்முடைய இனத்தினுடைய கோரிக்கைகளை சர்வதேச மட்டத்தில் வெற்றிபெறச் செய்ய தாயகத்தில் இருக்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சி பிரதிநிதிகளின் பங்களிப்பு அவசியம் என்பதை கருத்தில் கொள்ளவும் வேண்டுகிறோம் என்றுள்ளது. (ம-ஒ10)

ஒரே குடும்பத்தைச்...

பத்தைச் சேர்ந்தவர்கள். கிளிநொச்சி மருத்துவமனைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்ற நபரிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு சோதிக்கப்பட்டதில் அவருக்கு கொரோனா அறிகுறிகள் காட்டின. இதையடுத்து அவரின் குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டது. விசாரணைகளில் குறித்த நபர் பாரவூர்திச் சாரதி எனவும் வத்தளைக்குச் சென்று வந்தவர் எனவும் தெரியவந்தது. இதையடுத்து அவரின் குடும்பத்தினரிடம் இருந்து மீளவும் மாதிரிகள் பெறப்பட்டு சோதிக்கப்பட்டதில் இருவருக்குத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26,6)

கொரோனா....

சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கொரோனா காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இலங்கையை சுனாமி தாக்கியது. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவானோர் உயிரிழந்தனர். இவர்கள் நினைவாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்வேறு இடங்களிலும் சுனாமி நினைவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு டிசெம்பர் 26ஆம் திகதி காலையில் நினைவேந்தல்கள் நடைபெறுவது வழமை. இந்த ஆண்டு நினைவேந்தல்களுக்கு அனுமதி வழங்கப்படுமா என்பது தொடர்பில் கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வாவிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானம் தேவை என்று நாம் ஏற்கனவே அறிவித்துவிட்டோம். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் அதிக கவனம் தேவை. ஜனவரி மாதத்தில் கொரோனா தொற்றை நாம் குறைக்க வேண்டுமாக இருந்தால் இந்தமாதத்தின் இறுதி வாரத்தில் அனைத்துப் பொது நிகழ்வுகள், களியாட்டங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தவிர்க்க வேண்டும். எனவே அந்தக் காலப் பகுதியில் எந்தவொரு பொது நினை வேந்தல்கள் உள்ளிட்ட எதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. சுனாமியால் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்படுவது வழமை. அந்த நேரத்தில் வீட்டிலிருந்து சுனாமியால் உயிரிழந்தவர்களை நினைவுகூர முடியும்' என்றார் இராணுவத் தளபதி. (மஒ.5,22)

கண்ணிவெடி...

இரண்டு ஆண்டுகள் வரையில் செல்லும். அதற்கு 700 மில்லியன் ரூபா வரையில் தேவை இவ்வாறு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்த ஹேரத் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்றுச் சென்ற அவர், முகமாலை மற்றும் கிளாலி பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டார். 'இன்னும் 13 சதுர கிலோ மீற்றர் வரை கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளன. மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக கண்ணிவெடி அகற்றும் பணிகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன' என்று அமைச்சர் கூறினார். இதேவேளை அங்கு மீட்கப்படும் கண்ணிவெடிகளை இராஜாங்க அமைச்சர் பார்வையிட்ட போது, அவை அமெரிக்கா, ஈரான், பாகிஸ்தான் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டவை என்று கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களால் சுட்டிக்காட் டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (காணி), அமைச்சின் செயலர், 55ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி, கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களில் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (ம-ஒ,6)

பொலிஸாருக்கு...

தொற்று உறுதியாகியுள்ளது. இந்தச் சம்பவம் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

சுயதனிமைப்படுத்தப்பட்ட ஒருவர் நண்பர்களுடன் விருந்து ஒன்றில் கலந்து கொண்டுள்ளார். அந்த விருந்தில் பங்கேற்ற இன்னொருவர் கடைக்குச் செல்லும்போது, மாஸ்க் அணியாவிட்டால் பொலிஸார் கைது செய்யக்கூடும் என்பதால் பிறிதொருவரின் மாஸ்க்கை அணிந்து சென்றுள்ளார். அவர் அணிந்த மாஸ்க் சுயதனிமைப்படுத்தப்பட்டவருடையது. இந்த நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. அவருடன் விருந்தில் பங்கேற்ற அனைவரும் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு மாத்திரம் கடந்த சில தினங்களாக காய்ச்சல் காணப்பட்டுள்ளது. அவருக்கு உடனடியாக பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தவறுதலாக இன்னொருவருடைய மாஸ்கை அணிவதாலும் தொற்றுக்குள்ளாக நேரிடும். ஒருவர் அணிந்த மாஸ்கை இன்னொருவர் அணியக் கூடாது என்று சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (மஒ.5)

உருமாற்றமடைந்த...

இலங்கையிலும் பரவுவதற்கான அபாயம் உள்ளது. இதுகுறித்து தீவிர அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் சங்கம் எச்சரித்துள்ளது.

மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் கீர்த்தி விக்ரமரத்ன இது தொடர்பில் தெரிவித்ததாவது,

பிரிட்டனிலிருந்து நபர்கள் வருகை தரும்போதும் அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போதும் அந்த வைரஸ் பரவக்கூடிய அபாயம் உள்ளது. இந்த வைரஸ் பரவல் காரணமாக ஐரோப்பிய நாடுகளும் இந்தியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகளும் பிரிட்டனுக்கான விமானப் பயணங்களை இரத்துச் செய்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனிடையே கொரோனா வைரஸின் புதிய உருமாற்றம் ஆஸ்திரேலியா, டென்மார்க், இத்தாலி முதலான நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ)

காங்கேசன்துறை – காரைக்கால் கப்பல்சேவை

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திபற்றி அமைச்சர் அபயகுணவர்தன நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 23

இந்தியாவின் காரைக்காலுக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே மீண்டும் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் யோசனை இந்தியாவால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இதற்காக காங்கேசன்துறையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் அமைச்சர் அபயகுணவர்த்தன இன்று நேரில் ஆராயவுள்ளார். ஊர்காவற்றுறையில் அமைக்கப்பட்டுள்ள வணிக கப்பற்றுறை செயலக உப அலுவலகக் கட்டடத்தொகுதியை அமைச்சர் இன்று காலை 10 மணிக்குத் திறந்து வைக்கின்றார்.

அதைத் தொடர்ந்து காங்கேசன்துறைக்குப் பயணம் மேற்கொண்டு துறைமுக அபிவிருத்திபற்றிக் கலந்தாலோசிக்கவுள்ளார். (ம)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

கொரோனாவுக்கும்...

வுடன் ஜெனீவாத் தீர்மானம் என்ற இரண்டு எதிரிகளை எதிர்கொள்ளவுள்ளோம். இந்த இரண்டு எதிரிகளுக்கும் 2021இன் ஆரம்பத்திலேயே இலங்கை அரசு முடிவுகட்டும்' இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனாவை ஒழிப்பதில் நாம் நியமித்த கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தினர் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றனர். முழுநாட்டையும் முடக்காமல் நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்காமல் கொரோனா பரவும் இடங்களை அடையாளம் கண்டு அந்தப் பகுதிகளைத் தனிமைப்படுத்தித் தொற்றுப் பரவலைப் படிப்படியாகக் குறைத்து வருகின்றனர்.

இதற்கு ஒத்துழைத்துவரும் மருத்துவத்துறையினர், சுகாதாரத்துறையினர், முப்படையினர், பொலிஸார் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு எமது நன்றிகளும், பாராட்டுக்களும் எப்போதும் இருக்கும்.

பிரிட்டனில் கொரோனாவின் புதிய வகை வைரஸ் உருவெடுத்துள்ளது. அது இலங்கையிலும் பரவக்கூடாது என்பதற்காகவே அந்த நாட்டிலிருந்து இங்கு பயணிகள் வருவதை நாளை (இன்று) முதல் தற்காலிமாகத் தடை செய்துள்ளோம். இதேவேளை, வெளிநாடுகளிலிருந்து கொரோனாத் தடுப்புக்கான தடுப்பூசியை விரைவில் இலங்கைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, 2021இன் ஆரம்பத்திலேயே இலங்கையில் கொரோனாவுக்கு முடிவுகட்டி விடலாம் என்பதில் நாம் உறுதியாக இருக்கவேண்டும். இதனிடையே எதிர்வரும் மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வை முன்னிலைப்படுத்தி இங்கு எதிர்க்கட்சியினர் தமது சுயலாப அரசியல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து எமது அரசு வெளியேறிவிட்டது. எனவே, இம்முறை எமது நாடு மீது புதிய பிரேரணை கொண்டுவரப்பட்டாலும் அதற்கும் ஆரம்பத்திலேயே முடிவு கட்டியே தீருவோம்.

எதிர்க்கட்சியினரின் ஜெனீவாப் பரப்புரைகள் தொடர்பில் நாம் எவரும் அலட்டிக்கொள்ளக் கூடாது' என்றார். (ம-22)

தமிழீழக்...

தமிழினம் இலங்கையில் சிங்கள இனம் தோன்றுவதற்கு முன்பு தோன்றி வாழ்ந்த பழம்பெரும் இனம் என்னும் வரலாற்றுண்மையை நாடாளுமன்றத்தில் இடித்துரைத்த தலைவர் விக்னேஸ்வரன் இருக்கிறார்.

இரா.சம்பந்தர் போன்றவர்கள் இந்தத் தலைவர்களுடன் இணைந்து வட்டுக்கோட்டை மாநாட்டைப் போல் ஒரு மாநாட்டைக் காலம் தாழ்த்தாமல் நடத்தித் 'தமிழீழ மீட்பு' என்று தீர்மானம் இயற்றுவதில் உங்களுக்குச் சட்டச் சிக்கல்கள் இருக்குமானால் 'தமிழீழக் காப்பு' என்றாவது தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் இவ்வாறு ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவரும், உணர்ச்சிக் கவிஞருமான காசி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மையில் இலங்கை சென்ற இந்திய அதிகாரிகள் இரா.சம்பந்தனிடம் 'தமிழீழத்தைக் கைவிடுங்கள்' என்று சொன்னார்களா அல்லது 'தமிழ் மக்கள் தமிழீழக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார்கள். அபிவிருத்தித்தான் இப்போது அவர்கள் கொள்கை' என்று இந்திய அதிகாரிகளிடம் இரா. சம்பந்தன் சொன்னாரா என்பது இறைவனுக்குத் தான் தெரியும்.

நொடிக்கு நொடி சிங்களக் குடியேற்றத்தால் திட்டமிட்டு விழுங்கப்பட்டுத் தன் 'தாயக அடையாளத்தை' இழந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் தமிழீழத் தாயக 'மீட்பு'க்கு இந்தியாவின் துணை தேவை என்று தமிழீழ மக்கள் ஏங்கிநிற்கும் ஒருகாலச்சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தம்மைத் தாமே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சியினர்தான் 1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழீழத் தாயகக் கோட்பாட்டை உறுதிசெய்து அதன் விடுதலைக்கான கோரிக்கையையும் தீர்மானமாக நிறைவேற்றித் தந்தார்கள். அதே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரா.சம்பந்தன் தமிழீழ மக்கள் தலையில் இப்படி அள்ளி வைக்கலாமா? தமிழீழ அபிவிருத்திக்காக அல்ல தமிழீழ விடுதலைக்காகவே 40 ஆயிரம் மாவீரர்கள் தங்கள் இன்னுயிரைக் கொடையாகத் தந்தார்கள்.

தமிழீழ மக்களின் எதிர்ப்பார்ப்பையும் தமிழர் தலைவர்கள் இம்மாநாட்டில் தீர்மானமாய் இயற்றல் வேண்டும். உலகெங்கும் பரவி வாழும் ஈழத்தமிழர் நெஞ்சில் மட்டும் அல்ல அனைத்து உலகத் தமிழர் நெஞ்சிலும் 'தமிழீழம் தமிழர் தாயகம்' என்னும் உரிமைப் போர்க் கனல் பற்றி எரிய உணர்வூட்டுவோம் என்றுள்ளது. (ம-ஒ)

மருதனார்மடம்...

டன் தொடர்புடைய மேலும் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதையடுத்து கொத்தணி எண்ணிக்கை 94ஆக அதிகரித்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே குறித்த நபருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

இரணைமடுக்குளத்தின்...

வான்கதவுகள் 6 அங்குலம் அளவில் திறந்து விடப்பட்டன. கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபாவதி கேதீஸ்வரன் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் இரண்டு வான்கதவுகளை 6 அங்குலம் அளவில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

வவுனியா முதல், கனகராயன்குளம், மாங்குளம் ஈறாக இரணைமடுக்குளம் வரையிலான 560 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலப்பரப்பிலிருந்து இரணைமடுக்குளத்துக்கு வரும் நீரின் அளவு அதிகரித்து வருவதால், தொடர்ந்து பெய்யக்கூடிய மழையினால் குளத்தின் அதியுயர் தாங்குமட்டமான 36 அடியை அண்மிக்க முதல் நீரின் அளவைக் குறைக்கும் முகமாக இன்றையதினம் இரண்டு வான்கதவுகள் 6 அங்குலம் அளவில் திறக்கப்பட்டதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய நிலையில் இதுகுறித்து மக்கள் அதிகம் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறினர். (ம)

15 வயதுச் சிறுவன் உட்பட மேலும் ஏழு பேர் இறப்பு!

ஒட்டுமொத்த உயிரிழப்பு 183 பாதிப்பு எண்ணிக்கை 38,000

கொழும்பு, டிசெ. 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் நாட்டில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 183ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 170 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றும் 428 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 34 ஆயிரத்து 382 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 38 ஆயிரத்து 59ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 29 ஆயிரத்து 300 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 576 பேர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று உயிரிழந்தவர்களில் 15 வயதேயான சிறுவன் ஒருவனும் உள்ளடங்குகின்றார். (ம-22)

இலங்கையில் 30 குழந்தைகள் விற்பனை ஒருவர் வசமாக சிக்கினார்

கொழும்பு, டிசெ. 23

இலங்கையில் குழந்தைகள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாத்தளையில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிறந்து சில நாள்களேயான 30 குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-இ)

ENGLISH CLASSES
Zoom மூலம்
Gr.1 to O/L
Grammer With Syllabus
077 331 4608

SCIENCE CLASSESS
(விஞ்ஞான வகுப்புக்கள்) Zoom
2021 ஆம் ஆண்டுக்கான தரம்: 06 - 11 வரையான
தமிழ், ஆங்கில மொழி மூலமான
வினா விடை செய்முறை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
(எப்பிரதேசத்தவரும் கலந்துகொள்ளலாம்)
076 347 7188

வேலை வாய்ப்பு
பிரபால தனியார் கல்வி நிறுவனத்திற்கு கணினி அறிவுள்ள பெண்பிள்ளை தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர் விரும் பத்தக்கது நேரில் சமுகம் தரவும்.
தொடர்பு: NEW SCIENCE HALL, kANNATHIDDY ROAD, JAFFNA

குழு வகுப்புக்கள் (Zoom)
(பாடசாலை ஆசிரியர்களால் நடத்தப்படும்)
2021 கல்வியாண்டுக்கான தரம் : 6 -11 வரை
▶ கணிதம் ▶ விஞ்ஞானம்
▶ தமிழ் ▶ ஆங்கிலம் ▶ வரலாறு
தரம்: 03, 04, 05 மாணவர்களுக்கான
புலமை பரீட்சை வகுப்புக்கள்
ஆரம்பம் 25.12.2020 வெள்ளிக்கிழமை
(அனைத்தும் ஒரே இடத்தில்)
எப்பிரதேசத்தவரும் பங்குபற்றலாம்
077 036 6076

தேவை
01) கடின வேலை செய்யக்கூடிய சாரதிகள்
02) கணக்கியல் அனுபவமும் ஆங்கில அறிவுமுடைய 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் (ஆண்கள்)
03) கட்டடப்பொருட்கள் ஏற்றி இறக்க கூடியர்வர்கள்
சிற்றி ஹாட்வெயர் அன்ட் எஸ்ரோர்ஸ்
இல.55,57, எஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.